Annual subscription Rs. 50/-

# ஸ்பைஸ் இந்தியா

மணம் 22
சுகம் 5
மே 2009

## Saffron
### The gift of Kashmir valley













Three unbeatable reasons to include cardamom in your daily menu:



# NATURAL


TASTE
FLAVOUR
HEALTH

Cardamom. The spice of life. Taste, flavour and health rolled into one. Cardamom is one of the greatest blessings Nature has lavished on mankind. With a taste and flavour that make your food and drinks sizzle. And keep you in the pink of health.

Do you want your breath to stay fresh and fragrant? Simple! Pop some cardamom pods into your mouth and chew them.

Cardamom. The Queen of Spices. Let her reign over your kitchen. And work wonders on your body and mind.

CARDAMOM • MAKE IT A DAILY HABIT •



SPICES BOARD INDIA

(Ministry of Commerce & Industry, Govt. of India)

PB No. 2277, Cochin 682 025, India. Tel: 91 484 2333610 to 616 Fax: 91 484 2331429, 2334429
Email: spicesboard@vsnl.com Web: www.indianspices.com

**SPICES BOARD**
Ministry of Commerce & Industry
Government of India
Sugandha Bhavan
P.B. No. 2277
Palarivattom P.O.
Cochin - 682 025

तलைவர் : **வி.ஜே.குரியன் இ.ஆ.ப**
பிரதம ஆசிரியர் : **முனைவர் பி.எஸ்.ஸ்ரீகண்டன்தம்பி**
**துணை இயக்குநர் (விளம்பரத்துறை)**
ஆசிரியர் : **எஸ். பழனிச்சாமி**
**பதிப்பாசிரியர்**
வெளியிடுபவர் : **திருமதி. கே. லட்சுமிக்குட்டி**
**செயலர்**

பத்திரிக்கை ஆலோசனைக்குழு
**எஸ். கண்ணன்**
இயக்குநர் (மார்க்கெட்டிங்)
**முனைவர் ஜே. தாமஸ்**
இயக்குநர் (ஆராய்ச்சி)
**ஆர். சந்திரசேகர்**
இயக்குநர் (அபிவிருத்தி)


எழுத்தாளர்களின் கருத்துக்களுக்கு
வாரியம் பொறுப்பேற்காது.

தமிழ், மலையாளம், கன்னடம், ஆங்கிலம், இந்தி, நேபாளம், தெலுங்கு ஆகிய மொழிகளில் வெளியிடப்படுகிறது.

ஒரு வருடச் சந்தா ரூ. 50/–
ஐந்து வருடச் சந்தா ரூ. 200/–

சந்தாவை மணியார்டர் / டிராப்ட் மூலம்
The Secretary, Spices Board, Cochin - 25
என்ற பெயரில் எடுத்து
The Deputy Director (PUB), Spices Board,
P.B.No. 2277, Palarivattom P.O.,
Cochin - 682 025
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.


தொலைபேசி : 0484 – 2333610 – 616
தொலைநகல் : 0484 – 2331429, 2334429
மின் அஞ்சல் : spicesboard@vsnl.com
இணைய முகவரி : www.indianspices.com

அச்சகம்
நிசீமா பிரிண்டர்ஸ்,
கொச்சி – 18
தொலைபேசி : 2403760.

மணம் 22 | சுகம் 5 | மே 2009


# ஸ்பைஸ் இந்தியா

இந்திய வாசனைப் பொருட்களின்
விவசாய – வியாபார வளர்ச்சிக்காக
வெளிவரும் மாத இதழ்




## மே - 2009 இதழில்


| | |
|---|---|
| காஷ்மீர் பள்ளத்தாக்கில் குங்குமப்பூ விவசாயம் | 4 |
| செலரி வேளாண் முறைகள் | 8 |
| மணச் செய்திகள்<br>சா. அனந்தகுமார் | 11 |
| வாசனைப் பயிர்களுக்கு நீர்வழி உரமிடுவோம்<br>ஓய். இராஜகுமார் | 12 |
| சிவப்பு மிளகாயே சிறந்த மருந்து<br>விருதை எஸ். நாகரத்தினம் | 14 |
| புளியின் மருத்துவப் பயன்கள்<br>ரமா ராமநாதன் | 15 |
| வாசனைப் பயிர் வளர்ச்சியில் நுண்ணுயிரிகள் | 18 |
| நிகழ்வுகள் | 19 |
| பரிந்துரையில்லாமல்.....<br>போடி சிவாஜி | 27 |
| ஜூன் மாத சாகுபடிக் குறிப்புகள் | 29 |
| ஏப்ரல் மாத விற்பனைப் புள்ளிவிவரம் | 33 |



# காஷ்மீர் பள்ளத்தாக்கில் குங்குமப்பூ விவசாயம்

ஆங்கிலத்தில்

**முனைவர். ஷாமின் அகமது ஷா**

முதுநிலை உதவிப் பேராசிரியர்
புவியியல் மற்றும் மாநில அபிவிருத்தித் துறை
காஷ்மீர் பல்கலைக் கழகம்
ஸ்ரீநகர் - 190 006
மின்னஞ்சல் : shamincrows@gmail.com

தமிழில்

**எஸ். பழனிச்சாமி**

ஆசிரியர், ஸ்பைசஸ் போர்டு.

குங்குமப்பூ விவசாயம் செய்வது ஒரு தனிக் கலை என்றே கூறலாம். வேளாண் பணிகளில் தீர் மானம் எடுப்பது, இடம் தேர்வு செய்தல், விதைப்பு, கிளறுதல், களை எடுத்தல், அறுவடை மற்றும் அத னைத் தொடர்ந்தும் பயிர்ப் பராமரிப்பு என்று குங்கு மப்பூ விவசாயத்தில் திட்டமிடுதல் அவசியமாகிறது. குங்குமப்பூ ஒரு பல்லாண்டுப்பயிர். எனவே நட்ட முதலாண்டு தொடங்கி அதன் வேளாண் பணிகள் யாவுமே முறைப்படி நடைபெறுவது அவசியம். குங் குமப்பூ விவசாயத்திற்கு வேலையாட்கள் அதிகமா கத் தேவைப்படும். அதுபோலவே ஆரம்பகால முத லீடும் அதிகமாகத் தேவைப்படும்.

## இடத் தேர்வு

குங்குமப்பூ விவசாயத்திற்கான இடத்தைத் தேர்வு செய்வதே மிகமுக்கியமான திட்டமிடுதலாகும். குங்குமப்பூ கரேவா என்ற மண்ணில் நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கும். எனவே தேர்வு செய்யப்படும் இடத்திலுள்ள மண் கரேவா வகை மண்ணா அல்லது மற்ற வகையைச் சேர்ந்ததா என்று முதலில் தீர்மானிக்க வேண்டும். நிலத்தேர்வு செய்யும் பரப்பு விவசாயியின் பொருளாதாரப் பின்பலத்தை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும். அது செலவு செய்யும் அளவைப் பொறுத்து வேறுபடும். தேர்வு செய்யப்பட்ட நிலத்திற்கு அருகில் பெரிய மரங்கள் இருக்கக் கூடாது. அது மண்ணின் ஈரத்தன்மையைப் பாதிக்கும். மேலும் நிலத்திற்கு அதிகப்படியான நிழலைத் தந்து பயிர் வளர்ச்சிக்குத் தடையாகவும் இருக்கும். அதேபோல் தேர்வு செய்த நிலத்திற்கு அருகே நீர்நிலைகள் இருக்கக் கூடாது. ஏனென்றால் ஈரக்கசிவு ஏற்பட்டு அதனால் பயிர் வளர்ச்சி தடைப்படலாம்.



## நடவிற்கு நிலத்தைத் தயார் செய்தல்

அடுத்த நடவடிக்கை நடவிற்காக நிலத்தைப் பண்படுத்துவதாகும். நடுவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பிருந்தே நிலத்தைப் பக்குவப்படுத்த வேண்டும். இப்பகுதி விவசாயிகள் குங்குமப்பூ நடுவதற்கு முன் நிலத்தில் எண்ணெய் வித்துப் பயிர்களை வளர்ப்பதுண்டு. முறைப்படி மழைக்காலம் நிறைவடைந்து வசந்தகாலம் துவங்கும்போது இந்த நிலச்சீரமைப்பு வேலைகள் தொடங்கும். மார்ச் மாதம் நிலத்தில் அதிக ஈரப்பதம் இல்லாத வேளையில் உழவு செய்யப்படும். முதல் உழவு டிராக்டரில் இருக்கும். இதனைத் தொடர்ந்து நான்கு அல்லது ஐந்து முறை சுமார் 30-35 செ.மீ. ஆழத்தில் நிலம் உழப்படும். இந்த உழவின் போதே நிலத்திலுள்ள களைகள் அப்புறப்படுத்தப்படும். மேலும் இந்த உழவுகளுக்கிடையே மாட்டுச் சாணம் மற்றும் கம்போஸ்ட் ஆகியவை மண்ணில் இடப்படும். இந்த உரங்கள் ஒரு ஹெக்டேருக்கு 40 முதல் 50 டன் என்ற அளவில் இடப்படும். மீண்டும் மே மாதத்தில் ஒரு முறையும், ஜூன் கடைசி வாரத்தில் ஒரு முறையும் நேர்த்தியாக உழப்படும். இந்த கடைசி உழவின்போது நிலத்திலுள்ள களைகளை நீக்குவதில் விவசாயிகள் கண்ணும் கருத்துமாக இருப்பர். மண்ணை இளக்கமாக வைத்துக் கொள்வதற்காக இந்த உழவு 15 நாட்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும். இந்த உழவுப்பணி ஆகஸ்ட் மாத இறுதி வரை தொடரும்.

## விதை சேகரித்தல்

விதைக் கிழங்குகளை நடும்போது சேதாரம் ஏற்படாதவாறு கவனிக்க வேண்டும். நடப்படும் கிழங்கின் அளவிற்கும் மலர் உற்பத்திக்கும் தொடர்புண்டு. பொதுவாக விதைக் கிழங்குகளின் அளவு 2 செ.மீ. அல்லது அதற்கும் மேல் விட்டம் உள்ளதாக இருக்க வேண்டும். விதைக் கிழங்குகள் ஆரோக்கியமுள்ளதாகவும் பூஞ்சண நோய்கள் தாக்காதவைகளாகவும் இருக்க வேண்டும். விதைக் கிழங்குகளின் வெளிப்புறத் தோலில் உள்ள நார்த்தன்மை கொண்ட உறை அகற்றப்பட வேண்டும். இதற்கு ஐந்து சதம் காப்பர்

சல்பேட் கரைசலில் விதைக்கிழங்குகளை நனைத்து விதை நேர்த்தி செய்வதும் உண்டு. இவ்வாறு செய்வது ஒருசில முன்னணி விவசாயிகளிடம் மட்டுமே நிலவிவரும் செயலாக உள்ளது.

## நடவு காலம்

பொதுவாக குங்குமப்பூவின் விதைக் கிழங்குகளை ஜூலை மாத இறுதி வாரம் தொடங்கி ஆகஸ்ட் மாத இறுதி வரை நடப்படும். நடுவதற்கு மிகவும் ஏற்ற காலம் ஜூலை மாத நடுப்பகுதியாகும். நடுவதில் ஏற்படும் தாமதம் கிழங்குகளின் முளைப்பு த் திறனைப் பாதிக்கும். பருவத்திற்கு முன்னதாக நட்டுவிட்டால் வேர் மற்றும் தண்டு வளர்ச்சி மண்ணுடன் ஒத்துப் போவதில் வேறுபாட்டை உண்டாக்கும்.

## நடவு முறை

நடவேண்டிய ஆழம் : 7 – 10 செ.மீ.

இடைவெளி : செடிக்கு செடியுள்ள இடைவெளி தொடர்பான திட்டவட்டமான முறை எதுவுமில்லை. இருப்பினும் 5 முதல் 15 செ.மீ. இடைவெளி ஏற்றதாகும்.

நடுவதில் இரண்டு முறைகள் உள்ளன

1. உழவு முறை

2. கை நடவு முறை

பொதுவாக உழவு முறை நடுதலே விவசாயிகளால் பின்பற்றப்படுகிறது. இது எளிதானதும் சிக்கனமானதுமாகும். இதன்படி உழும்போது சால் எடுக்கப்படும். இதில் ஒருவர் விதைக் கிழங்குகளை ஏகமாகப் போட்டுக் கொண்டே போக பின்னால் ஒருவரோ அல்லது இருவரோ அந்த கிழங்குகளை சரியான இடைவெளிகளில் எடுத்து வைப்பர். எல்லா சால்களிலும் கிழங்குகள் இடப்பட்டபின் 2.5 மீட்டர் அளவிலான சதுரப் பாத்திகளாக பிரிக்கப்படும். இதில் 30 செ.மீ. அகலமும் 15 செ.மீ. ஆழமுமுள்ள வடிகால்கள் எடுக்கப்படும். சரியான முறைகளில் வடிகால் வசதி செய்யப்படாவிட்டால் கிழங்கு அழுகல் ஏற்படவும் வாய்ப்புகள் உருவாகும்.

## கைநடவு

ஆழமான சால்களை எடுத்து அதில் 8 முதல் 10 செ.மீ. ஆழத்தில் விதைக் கிழங்குகளை நடுவர். கிழங்கிற்குக் கிழங்கு 5–10 செ.மீ. இடைவெளியும், வரிசைக்கு வரிசை 12–18 செ.மீ. இடைவெளியும் அமைக்கப்படும். இதிலும் முன்பு குறிப்பிடப்பட்டதைப் போலவே சதுரப் பாத்தி அமைத்தல் மற்றும் வடிகால் வசதிகள் செய்யப்படும். இவ்வாறு அமைக்கப்படும் பாத்திகளுக்கு 'பொசாவரே' என்று பெயர். இம்முறையில் ஆட்செலவு அதிகமாகும். ஆனாலும் போதுமான இடைவெளியும், விதைக்கிழங்குகள் நடப்பட்ட விதத்தையும் வைத்துப் பார்க்கும்போது நட்ட ஒரு வருடத்திலேயே பூக்கள் பூக்கத் தொடங்கும். ஆகஸ்ட் இரண்டாம் வாரத்திற்குப் பிறகு தாமதமாக நடவு செய்தால் செடிகளின் வளர்ச்சி தாமதமாவதோடு மலர்களின் சூல்முடியின் அளவும் குறைவதால் தரமான குங்குமப்பூ கிடைக்காது. ஜூலை மாத நடவானால் ஒரு கிழங்கிற்கு ஐந்து பூக்கள் வரை கிடைக்கும்.



விதைக் கிழங்குகளை நடவு செய்தபின் ஏப்ரல், மே வரை நிலத்தை ஒன்றும் செய்யக் கூடாது. ஏப்ரல் மாத இறுதியில் அல்லது மே மாத துவக்கத்தில் குங்குமப்பூ செடியின் தாள்களை அரிவாளால் அறுத்தெடுத்து சூரிய ஒளியில் உலர்த்தி கால்நடைகளுக்கு குளிர்கால உணவாக போடப்படும். இதனைத் தொடர்ந்து ஜூன் மாதத்தில் களைக்கொத்து கொண்டு களை எடுக்க வேண்டும். இதனால் நிலத்திற்குக் காற்றோட்டம் கிடைக்கிறது. அதனால் கிழங்குகளின் வளர்ச்சியும் தெளிவாகிறது.

இரண்டாம் களை ஆகஸ்ட் முதல் வாரத்தில் செய்யப்படுகிறது. இந்த இரண்டாம் களையெடுப்பு நல்ல விளைச்சலுக்கு உதவுகிறது. செப்டம்பர் முதல் வாரம் அதாவது பூப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன் மூன்றாம் களை எடுக்கப்படுகிறது. மூன்றாம் களைக்குப் பின் பாத்திகளில் நீர் தேங்காதவாறு எடுத்துக் கட்டும் வேலைகள் நடைபெறும். மேலும் மண்ணை மரத்தாலான சுத்தி கொண்டு தட்டி, கட்டிகளை பொடியாக்கி வைப்பதால் செடிகளுக்கு காற்றோட்டம் கிடைக்க ஏதுவாகிறது.

மண்ணின் தன்மையைப் பொறுத்து இடத்திற்கு இடம் பயிரின் ஆயுட்காலம் வேறுபடுகிறது. நடும் போது உள்ள வெப்பநிலை மற்றும் ஈரத்தன்மை போன்றவை இப்பயிரின் ஆயுட்காலத்தைத் தீர்மானிக்கின்றன. பொதுவாக கரேவா வகை மண்ணில் குங்குமப்பூ செடியின் ஆயுட்காலம் 10 முதல் 15 ஆண்டுகளாகும். இதர மண் வகைகளில் 4 முதல் 7 ஆண்டுகள் மட்டுமே இதன் ஆயுட்காலம் இருக்கும்.

## அறுவடை

குங்குமப்பூவின் அறுவடைக்காலம் அக்டோபர் மாத இரண்டாம் வாரம் தொடங்கி நவம்பர் மாத முதல் வாரம் வரை இருக்கும். மலர்களை அறுவடை செய்வது என்பது தினமும் அதிகாலையில் பனித்துளிகள் மறைந்ததும் துவங்கும். மலர் அறுவடை மிக மிகக் கவனத்துடன் செய்ய வேண்டியதாகும். அறுவடை விரல்களால் மட்டுமே செய்யப்பட வேண்டும். மண்ணைத் தொட்டுவிடக் கூடாது. இதற்கென செய்யப்பட்ட மூங்கில் கூடைகளில் மலர்கள் சேகரிக்கப் படுகின்றன. பெண்களும் குழந்தைகளும் பொதுவாக மலர் அறுவடை செய்கின்றனர்.

ஒரு கிலோ குங்குமப்பூ எடுக்க 1,50,000 பூக்கள் தேவைப்படும். ஒரு பாத்திக்கு இரண்டு பேர் வீதம் அறுவடை மேற்கொள்வர். மலராத மொட்டுகளை சேதப்படுத்தாமல் நேர்த்தியாக மலர்களை அறுவடை செய்ய வேண்டும். பொதுவாக ஒரு நாள் விட்டு ஒரு நாள் அறுவடை நடைபெறும்.

## சூல்முடி பதப்படுத்துதல்

மலர்களை சேகரித்த பிறகு இதழ்களிலிருந்து சூல்முடிகளை பிரித்தெடுப்பர். இல்லையெனில் மலர்கள் வாடிவிடும். இந்த சூல்முடிகளை பிரித்தெடுக்கும் வேலையை அறுவடை செய்த இரண்டு நாட்களுக்குள் செய்திட வேண்டும். இவ்வாறு பிரித்தெடுத்த சூல்முடிகளை உலர்த்தியபின் கிடைப்பதே குங்குமப்பூ. காஷ்மீர் பள்ளத்தாக்கில் பொதுவாக சூரிய வெப்பத்தில் உலர்த்தும் முறையே பின்பற்றப்படுகிறது. உலர்த்துவதில் மிகச் சிறந்த முறை அறையில் நிழலில் உலர்த்துவதே ஆகும். இது அதன் உண்மையான நிறத்தை நிலைநிறுத்த உதவும்.

உலர்த்தும்போது குங்குமப்பூவில் கசப்புத் தன்மையைத் தரும் காரணியான பைக்ரோ குரோசின் வெடித்து வருவதால் குங்குமப் பூவிற்கான அதன் இயல்பான மணமும் இந்த உலர்த்தும் முறையில் கிடைக்கிறது.

காஷ்மீரில் குங்குமப்பூ விவசாயம் பெரும்பாலும் பாம்பூர் பகுதியில்தான் அதிகமாக நடைபெறுகிறது. இதுவே குங்குமப்பூவிற்கான வர்த்தக மையமாகவும் திகழ்கிறது. குங்குமப் பூவில் கோங் (Kong) மற்றும் நாவால் (Nawal) ஆகிய ரகங்கள் உள்ளன. கோங் ரகத்தில் சூல்முடி சூல் தண்டுடன் ஒட்டி இருக்கும். நாவால் ரகத்தில் சூல்முடி மட்டும் இருக்கும், சூல் தண்டு இருக்காது. ஐந்து முதல் ஆறு வருடம் கொண்ட பயிரிலிருந்து ஒரு ஹெக்டேரிலிருந்து 1.40 முதல் 3.10 கிலோ குங்குமப்பூ கிடைக்கும்.

# செலரி வேளாண் முறைகள்


ஆங்கிலத்தில்

R.S. மீனா
M.M. அன்வர்
O.P. ஐஸ்வாத் மற்றும் M.A. கான்

விதை வாசனைப் பொருட்களின் தேசீய மையம்,
தாபிஜி, அஜ்மிர் - 305 206.

தமிழில்

எஸ். பழனிச்சாமி


செலரி ஒரு விதை வாசனைப் பயிராகும். இந்தியாவில் இது ரெண்டம் அல்லது அஜ்மோலா என்ற பெயர்களில் அறியப்படுகிறது. இந்தியா செலரியை அதிக அளவில் உற்பத்தி செய்வது மட்டுமல்லாமல் ஏற்றுமதி செய்வதிலும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது. ஏப்ரல்-நவம்பர் 2008 கால அளவில் சுமார் 2,025 டன் செலரி இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகியுள்ளது. இதன் மதிப்பு ரூ. 1316.50 லட்சமாகும். பச்சை நிறத்துடன் சாறுமிக்க இந்த மூலிகைச் செடி காய்கறி மற்றும் சாலட் தயாரிப்புகளில் பயன்படுத்தப்படுகிறது. மேலும் இச்செடியின் உலர்ந்த விதைகளே வாசனைப் பொருளாக உணவுப் பொருட்களுக்கு வாசந்தர பயன்படுத்தப்படுகிறது.

செலரி இந்தியாவில் பஞ்சாபில் அமிர்ட்சரிலும், ஹரியானாவில் பானிப்பட்டிலும், உத்திரப் பிரதேசத்தில் ஷஹரன்பூரிலும் அதிகமாக பயிராகிறது. **செலரி எண்ணெய் கீழ் வாதத்தை குணப்படுத்தும் நல் மருந்தாகும்.**

செலரி விதையில் 2.5 முதல் 3 சதம் வரை ஆவியாகும் எண்ணெய் உள்ளது. இந்த எண்ணெய் உணவுப் பொருட்கள், மதுபானங்கள், உடலிற்கு சுகந்தம் தரும் தைலங்கள் மற்றும் சூப்களிலும் பயன்படுத்தப்படுகிறது.

**அட்டவணை-1:**

100 கிராம் செலரி விதையில் உள்ள சத்துப் பொருட்கள்

| சத்துக்கள் | யுஎஸ்டிஏ | ஏஎஸ்டிஏ |
|---|---|---|
| தண்ணீர் (கி) | 60.4 | 5.0 |
| ஃபுட் எனர்ஜி (K Cal) | 392 | 450 |
| புரோட்டீன் (கி) | 18.07 | 18.0 |
| கொழுப்பு (கி) | 25.27 | 22.8 |
| கார்போஹைடிரேட் (கி) | 41.35 | 43.8 |
| சாம்பல் (கி) | 9.27 | 10.2 |
| கால்சியம் (கி) | 1.767 | 1.8 |
| பாஸ்பரஸ் (மிகி) | 547 | 550 |
| சோடியம் (மிகி) | 160 | 170 |
| பொட்டாசியம் (மிகி) | 1400 | 1400 |
| இரும்பு (மிகி) | 44.9 | 44.9 |
| தியானமன் (மிகி) | - | 0.41 |
| ரிபோலாவின் (மிகி) | - | 0.49 |
| நியாசின் (மிகி) | - | 4.4 |
| அஸ்கார்பிக் (மிகி) | 17.14 | 17 |
| வைட்டமின் எ | 5 | 5 |

## பரிந்துரைக்கப்படும் ரகங்கள்

### என்ஆர்சிஎஸ்எஸ் எ செல்-1

இந்த ரகம் பஞ்சாப் லோக்கல் ரகத்திலிருந்து உருவாக்கப்பட்டதாகும். வறண்ட பகுதியில் பாசனப் பயிராக இதனைப் பயிரிடலாம். சராசரியாக ஒரு ஹெக்டேருக்கு 8.01 குவிண்டாலும் அதிகபட்சமாக 12.1 விளைச்சல் கிடைக்கும்.

## நடவு முறை

**நாற்றங்கால் நடவு:** செப்டம்பர் முதல் அக்டோபர் வரை.

**வயலில் நடவு:** டிசம்பர் முதல் ஜனவரி வரை.

செலரி விதைகள் மூலமாகவே விதைக்கப்படுகிறது. பொதுவாக கையில் எடுத்து தெளிக்கும் முறையே வழக்கத்தில் உள்ளது. $1000m^2$ அளவுள்ள நாற்றங்காலிற்கு ஒரு கிலோ செலரி விதை தேவைப்படும். விதைகள் முளைக்க 20-25 நாட்களாகும். விதைப்பு காலத்தில் மண்ணில் ஈரப்பசை அவசியம். இதனால் நல்ல முளைப்புத்திறனைப் பெறலாம்.

தரமான விதைகளைப் பெறவும், மண்ணால் ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்தவும் செலரி விதைகளை பவிஸ்டின் அல்லது கேப்டன் அல்லது தரிம் போன்றவற்றுடன் கலந்து விதைக்க வேண்டும். ஒரு கிலோ விதைக்கு 2.5 கிராம் என்ற அளவில் மேற்கூறிய மருந்துகளில் ஏதேனும் ஒன்றைக் கலக்கலாம்.

## வயல் நடவு

நடவு செய்யும் காலத்தைப் பொறுத்து 45-60 நாட்களான நாற்றுக்கள் நடவிற்கு ஏற்றதாகும். வரிசைக்கு வரிசை 30-40 செ.மீ. மற்றும் செடிக்குச் செடி 15 செ.மீ. இடைவெளியில் நாற்றுக்களை நடவு செய்து உடனே நீர் பாய்ச்ச வேண்டும்.

## உரமிடுதல்

மண் பரிசோதனை செய்ததன் அடிப்படையில் தேவைப்படும் சத்துக்களை உரங்களாகப் போட்டால் போதும். எனினும் பொதுவாக ஒரு ஹெக்டேருக்கு 15 டன் ஆர்கானிக் உரம், நைட்ரஜன் 25 கிலோ, பொட்டாஷ் 40 கிலோ,                20 கிலோ ஆகியவற்றை அடியுரமாகப் போட்டால் நல்ல விளைச்சல் கிடைக்கும். நடவு செய்த 30 நாட்களுக்குப் பிறகு 25 கிலோ நைட்ரஜனை இரு தவணைகளில் போட வேண்டும். நைட்ரஜன் சார்ந்த உரங்களைப் போடும்போது மண்ணில் ஈரப்பதம் இருக்க வேண்டியது அவசியமாகும்.

| நோய்கள் | அறிகுறிகள் | கட்டுப்பாடு |
|---|---|---|
| 1. தண்டு அழுகல் | பூஞ்சணத்தால் வருவது. கறுப்பு புள்ளிகள் தோன்றும் பின் செடி மடியும். | பாவாஸ்டின் 0.1 சதம் கொண்டு விதை நேர்த்தி செய்யலாம். |
| 2. ஏர்லி பிளைட் | பூஞ்சணத்தால் வருவது. முற்றிய இலைகளில் சிறிய வட்ட வடிவ பிரவுன் கலந்த மஞ்சள் நிறப்புள்ளிகள் தோன்றும். | விதைகளை $48^0C$ சுடநீரில் 30 நிமிடம் வைத்து பின் 0.2 சதம் காப்பர் ஆக்சி குளோரைட் தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| 3. லேட் பிளைட் | பூஞ்சணத்தால் வருவது. இலை ஓரங்களில் நீர் கோர்த்த வட்ட வடிவம் தோன்றி பின் கறுப்பு நிறமாக மாறும். | டைதேன் Z78 0.2% தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| 4. ஃபுசோரியம் எல்லோ | பூஞ்சணத்தால் வருவது. இலைகளில் மஞ்சள் வடிவில் தோன்றி இலை வாடிடச் செய்யும் | பயிர் சுழற்சி தேவை. மேலும் நோய் எதிர்ப்பு ரகங்களை தேர்வு செய்யலாம். |

## நீர்ப்பாசனம்

செலரி ஒரு ஈரம் விரும்பும் பயிராகும். அடிக்கடி நீர்ப்பாசனம் செய்வது அவசியம். 7 முதல் 14 நாட்கள் இடைவெளியில் நீர்ப்பாசனம் செய்யலாம். எனினும் மார்ச் வரை ஆறு நீர்ப்பாசனம் தேவைப்படும். அதனைத் தொடர்ந்து மழைக்காலம் தொடரும்.

## களை

செலரி வயல் எப்போதும் களைகளற்று இருக்க வேண்டும். நட்டு 30 நாட்களில் ஒரு முறையும், தேவைப்பட்டால் 20–30 நாட்கள் இடைவெளியில் களை எடுத்து நிலத்தைத் துப்புரவாக வைத்திருக்க வேண்டும்.


## நோய்

செலரியை அதிகமாக நோய்கள் தாக்க வாய்ப்புண்டு. அவற்றுள் பூஞ்சாணம், வேர்புழு, பாக்டீரியா மற்றும் வைரஸ் போன்றவை முக்கியமானவை.

அதேபோல் செலரியை பல பூச்சிகளும் தாக்குகின்றன. காரட் ரஸ்ட்ஃபிளை, செலரி வோர்ம், செலரி லீப் மைனர் போன்றவை முக்கியமானவையாகும். டைமெதேட், குயினால்பாஸ், போரேட் குறுணை போன்றவை கட்டுப்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

## அறுவடை

விதைகள் முற்றி அடர் பிரவுன் நிறத்திற்கு மாறியவுடன் முழு செடியையும் தரை அளவில் அறுத்து அறுவடை செய்யலாம். அதிகாலை வேளையில் அறுவடை செய்வது உகந்தது. ஒரு ஹெக்டேருக்கு 10 முதல் 15 குவிண்டால் விளைச்சலாகக் கிடைக்கும்.



# மணச் செய்திகள்

சா. அனந்தகுமார்
சிவமயம்,
13/75 - ஸ்கூல் தெரு,
அகஸ்தீஸ்வரம் - 629 701
குமரிமாவட்டம்

1. ஓமம் என்பது பழமாகும். இது உம்பெலிபெரே என்ற தாவரக்குடும்பத்தின் கீழ் வருகிறது. இந்த இனத்தில் 270 பிரவுகளும், 2700 வகைகளும் உள் ளன.

2. ஆல்ஸ்பைஸ் எனப்படும் பிமெண்டோ தாவரத் திற்கு பிமெண்டோ என்ற இந்த பெயரை வழங் கியவர்கள் ஸ்பானியர்கள் ஆவார்கள். இது மிளகு போல் இருக்கிறது என்ற தவறான எண் ணத்தில் ஸ்பானியர்கள் இப்பெயரைச் சூட்டினார் கள். ஆங்கிலத்தில் முதலில் ஜமைக்கா மிளகு என அழைக்கப்பட்டது.

3. இமயமலையின் கீழ்ப்பகுதியில் தாரு என்ற ஒரு வகை காட்டு மாதுளை காணப்படுகிறது. இதன் உலர்த்தப்பட்ட விதைகளிலிருந்து சிறந்த நறும ணப் பொருளான அனார்த்தனா எடுக்கப்படுகி றது.

4. ஏஞ்ஜெலிகா எனப்படும் மணத்தாவரத்தின் வேர் ஜின் தயாரிப்பில் பயன்படுகிறது. பிரஞ்சு வகை மதுபான வகைகளில் இதன் வேர்கள் அதிகமா கப் பயன்படுகிறது.

5. விதை வகை மணத்தாவரமான சோம்பிலிருந்து பிழிந்து எடுக்கப்படும் எண்ணெய் மிகவும் மண முடையதாக இருப்பதால் மிட்டாய், ரொட்டி வகை, பானங்களில் மணமூட்டப் பயன்படுகிறது.

6. மிளகாய் முதன் முதலில் தென் அமெரிக்காவில் தான் பயிரிடப்பட்டது. 15ம் நூற்றாண்டில் போர்த் துக்கீசியர் மிளகாயை இந்தியாவிற்கு கொண்டு வந்தனர்.

7. மணத்தாவரமான ரோஸ் மேரியிலிருந்து ஒரு வ கையான தைலம் எடுக்கப்படுகிறது. இந்த தைலம் சோப்பு மற்றும் ஷாம்பு வகைகள், வாசனை சோப்புகளிலும் சேர்க்கப்படுகிறது. மருந்துகள், உடம்பை சிவப்பாக்கும் களிம்பு வகைகளிலும் இது சேர்க்கப்படுகிறது.

8. சீரகம் பைபிள் காலத்திலேயே மக்களுக்கு தெரிந்த ஒரு மணப்பொருளாக இருந்து வந்துள் ளது. ஈரான், இந்தியா, சீனா, ரஷ்யா, இந்தோனேஷியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் தற்போது சீரகம் பயிரிடப்படுகிறது. ஈரானிலி ருந்து பச்சை சீரகம் என்ற வகை ஏற்றுமதியாகி றது.

9. இந்தியாவிற்கு 1800ல் ஆங்கிலேயர்களால் கிராம்பு அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கையில் 1796ல் கிராம்பு பயிரிடப்பட்டது. ஐரோப்பாவில் 1265ம் காலகட்டத்திலேயே கிராம்பு பயிரிடப்பட் டுள்ளது.

10. மணத்தாவரமான பே அல்லது லாரல் இலைகள் உலகத்தின் பழமையான ஒரு மூலிகையாகும். லாரல் மலர் வளையங்களை கிரேக்கர்களும், ரோமானியர்களும் வீரர்களுக்கு அணிவித்து வணக்கம் செலுத்தினார்கள்.




# வாசனைப் பயிர்களுக்கு நீர்வழி உரமிடுவோம்!

**ஓய். இராஜகுமார்**

சாந்தி நிலையம், குருவிக்காடு
மார்த்தாண்டம் வடக்கு - அஞ்சல் 629 165
குமரி மாவட்டம், தமிழ்நாடு.

நிலத்தடி நீர் படிப்படியாக குறைந்து வரும் தற்போதைய சூழ்நிலையில் கிடைக்கும் நீர் ஆதாரத்தைக் கொண்டு அதிக பரப்பளவில், சொட்டுநீர்ப் பாசன முறை மூலம் வாசனைப் பயிர்களை சாகுபடி செய்ய முடியும். வாசனைப் பயிர்களில் வளர்ச்சி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும், ஏற்றுமதிக்கேற்ற தரம் கொண்ட விளைபொருட்களை உற்பத்தி செய்வதற்கும் சொட்டுநீர்ப் பாசனம் மற்றும் நீர்வழி உரம் இடும் முறைகள் உதவுகிறது.

வழக்கமாக வாசனைப் பயிர்களுக்குரிய ஊட்டச் சத்துக்கள் அடியுரமாகவும், மேலுரமாகவும் இடப்படுகிறது. ஒரு ஆண்டுக்கு தேவைப்படும் உர அளவு இரண்டு அல்லது மூன்று முறையாக பிரித்து இடப்படுகிறது. இவ்வாறு மொத்தமாக அனைத்து உரங்களும் இடப்படும்பொழுது மண் அரிமானம், ஆவியாதல், இடப்பெயர்ச்சி போன்றவைகளால் ஊட்டச் சத்துக்கள் வேர்ப்பகுதியை விட்டு வெகுதூரம் சென்றுவிட வாய்ப்பு உள்ளது. பெரும்பாலான தோட்டங்களில் நாம் இடும் ஊட்டச் சத்துக்கள் 50 சதவீத அளவிற்குத்தான் வாசனைப் பயிர்களால் பயன்படுத்தப்படுகிறது.

நாம் இடும் உரச்சத்துக்களை வாசனைப் பயிர்கள் முழு அளவில் பயன்படுத்த சொட்டுநீர்ப் பாசனம் ஓர் சிறந்த வரப்பிரசாதமாகும். நீரில் கரையக்கூடிய உரங்களையும், திரவ உரங்களையும் சொட்டுநீர்ப் பாசனம் வழியாக செடிகளின் வேர்ப் பகுதிக்கு நீர் வழியே கலந்து செலுத்தும் முறை 'பெர்டிகேஷன்' (Fertigation) என அழைக்கப்படுகிறது. இதை நியூட்ரிகேஷன் என்று சொல்வது இன்னும் பொருத்தமாக இருக்கும். தெளிப்பு நீர்ப்பாசனம் வாயிலாகவும் இதைச் செய்யலாம்.

நீர்வழி உரமிடும்போது தற்போது கடைகளில் வழக்கமாக கிடைக்கும் உரங்களைப் பயன்படுத்தக் கூடாது. ஏனெனில் இவற்றில் உள்ள பொருட்களும், அசுத்தங்களும் முழுமையாக நீரில் கரையும் தன்மை உடையவை அல்ல. இதற்கென தற்போது திரவ


மற்றும் நீரில் கரையும் உரங்கள் பிரத்தியேகமாக, சர்வதேச தரத்திற்கொப்பாக தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. வாசனைப் பயிர்களுக்கு பரிந்துரைக்கப்படும் உர அளவின் அடிப்படையில், திரவ மற்றும் நீரில் கரையும் உரங்கள் செலுத்தப்பட வேண்டும்.

நீரும், ஊட்டச்சத்துக்களும் சரியான அளவில் செடிகளின் வேர்ப்பகுதிக்கு செலுத்தப்படுவதால், பயிரின் வளர்ச்சி ஊக்குவிக்கப்பட்டு மகசூல் 100 சதவீதம் வரை அதிகரிக்கின்றது. ஊட்டச்சத்துக்கள் வேர்களால் எளிதாகவும், விரைவாகவும் உறிஞ்சப்படுகிறது. நேரடி உரமிடுதலில் ஏற்படும் சில தீங்குகள் இதில் தவிர்க்கப்படுகின்றன. ஊட்டச்சத்துக்கள் அதிக அளவு நீரில் கரைந்து, குறைந்த அடர்வுடன் செடியின் வேர்ப்பகுதியை அடைவதால் எந்நிலையிலும் செடிகள் பாதிக்கப்படுவதில்லை. நேரடி உரமிடுதலை விட இம்முறையில் உர அளவு, நேரம் மற்றும் ஆட்கூலி, திறன் ஆகியவை சேமிக்கப்படுகிறது.


வேர்ப்பகுதியைச் சுற்றி எப்பொழுதும் குறைவான அளவு ஊட்டச்சத்துக்களே இருப்பதால் கன மழையினால் ஏற்படும் உர இழப்புகள் கணிசமாக தவிர்க்கப்படுகிறது. மணல், பாறை கலந்த மண், மலைப் பகுதி போன்ற இடங்களிலும் இம்முறை மூலம் வெற்றிகரமாக நீர்வழி உரத்தினைச் செலுத்தி பயிரினை வளர்க்க இயலும். மண்ணில் ஏதாவது கோளாறுகள் இருந்தாலும், இம்முறை மூலம், பயிர் வளர்ச்சி பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யலாம். உரமிடும் பணியை எளிதாக்கி அதிக வருமானம் பெறுவதற்கு வாசனைப் பயிர்களுக்கு நீர்வழி உரமிடுவோம்!


## Machinery Protection & Quality Assurance

**Optimum Productivity in the Plastic Industry**







- Metal Detectors
- Metal Separators
- Magnetic Separators
- X-Ray

S + S metal detectors and separators identify and remove all metals, not only ferrous, but stainless steel, aluminium, copper, brass and lead. We cover every stage in the process, from manufacturing granules through to finished products and on to recycling.

S+S

**Additional Benefits**

- Separating magnetic & non-magnetic metals
- Removing magnetic metals
- Professional solution for plastics recycling, chemicals & food industry.
- Machinery Protection
- Quality Assurance

**Highly developed technology**

- Product effect compensation
- Digital signal processing
- Automatic teach-in
- Multi- product memory
- Simple to operate

**S+S Separation and Sorting Technology GmbH**
Office No.1, Madhavi Apts., 2102/5 Vijaynagar Colony
Sadashiv Peth, Off Tilak Road,
Pune - 411 030
Tel. : +91 20 41008312
Fax : +91 20 41008301
Email : makarand.mandke@se-so-tec.com

www.se-so-tec.com

# சிவப்பு மிளகாயே சிறந்த மருந்து





**விருதை எஸ். நாகரத்தினம்,**
விருதுநகர்,
தமிழ்நாடு

மிளகாய் இல்லாமல் சமையல் இல்லை. நறுமணப் பண்டங்களுள் (ஸ்பைசஸ்) ஒன்றாகச் சிவப்பு மிளகாயும் உள்ளது. எனில், மிளகாயில் நறுமணம் உள்ளதா? மிகக் காரமான நறுமணம் மிளகாய்க்கு உறுதியாக உண்டு. எண்ணெய்யில் மிளகாயை இட்டு சூடாக்கும்போது அதன் அதீதமான காரமான மணம் நாசிக்கு எட்டவில்லையா?

இத்தகைய உயர் தரத்தில் கார வேகம் உள்ள மிளகாய் உணவில் சேர்க்கப்படும்பொழுது உடலுக்கு நன்மை உண்டா? உண்டு என்று மேல்நாடுகளின் விஞ்ஞான ஆய்வாளர்கள் அண்மையில் அறிவித்துள்ளனர். அதிகப்படியான ஊளைச் சதையையும், கொழுப்பையும் குறைக்கும். மாரடைப்பு ஏற்படாது. வயிற்றில் உதயமாகும் கிருமிகளை அழிக்கும். சரீரத்திற்கு புத்துணர்ச்சியை ஏற்படுத்தும் – இவை சிவப்பு மிளகாயின் மருத்துவக் குணங்கள் ஆகும். அமெரிக்காவில் ட்யுக் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள், குடல் கோளாறுகளைச் சிவப்பு மிளகாய் போக்குகிறது என்று அண்மையில் அறிவித்துள்ளனர். சிவப்பு மிளகாயில் உள்ள 'கேப்சாய்சின்' சத்தைப் புற்றுநோயாளிகளின் உடம்பில் செலுத்திப் பரிசோதனை செய்து, புற்றுநோய் மட்டுப்பட்டதை அறிந்துள்ளனர்.

மிளகாயின் எல்லா ரகங்களுக்கும் சீரிய பல குணங்கள் உண்டு என உணரப்படுகிறது. நாகாலந்து, அசாம் பகுதிகளில் பெருவாரியாகப் பெறப்படும் 'பூட் ஜோலாக் கியா' மிளகாயின் நெடிக்கு காட்டு யானைகள் ஊருக்குள் நுழைவதில்லையாம்.

சிவப்பு மிளகாயின் பயன்பாட்டில், வயிற்றில் 'அல்சர்' வராது காக்கும் என்றும், இரத்தத்தில் கொழுப்பை உண்டாக்குகின்ற 'ட்ரைகிளைசிரைட்' குறையும் எனவும், ஆபத்தான 'பாக்டீரியா' அழியும் என்றும் நவீன விஞ்ஞானிகள் நல்கிய நல்வாக்குகள் நானிலமெங்கும் நிலவியுள்ளன. கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச் சத்து ஆகியவை அதிகமுள்ள குடமிளகாய் அஜீரணத்தைப் போக்கும் என்று சித்த வைத்திய மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளனர். சித்த வைத்திய சாலைகளில் தயாரிக்கப்படுகின்ற மிளகாய்த் தைலம் உடல் வலியைப் போக்கும் என்பது அறிவியல் கூற்று. மாரடைப்பு, மூட்டு வலி முதலான பல்வேறு பிணிகளுக்கும் சிறப்பான மருந்து சிவப்பு மிளகாயே என்கின்றனர் அனுபவ ஆராய்ச்சியாளர்கள்.

அமெரிக்காவில், லாஸ் ஏஞ்செல்ஸ் நகரில் பணியாற்றும் டாக்டர் ஜேக்கப் டெய்டிபாம் என்பவரின் விஞ்ஞானக் குழுவினர் சிவப்பு மிளகாயில் அடங்கியுள்ள விதைகளைத் தனியே பிரித்தெடுத்து பல வழிகளிலும் பரிசோதனைகள் செய்து, மருத்துவக் குணங்களைக் கண்டுள்ளதோடு, முக்கியமாகப் புற்றுநோயைக் குணப்படுத்துகிறது என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

**"நார்ச்சத்து அதிகம் உள்ள மிளகாயை அளவோடு உணவில் சேர்ப்பது உண்போர்க்கு நன்மை நல்க வல்லது"** – இவ்வாறு நவில்கின்றார் டாக்டர் வி. எஸ். நடராஜன்.

(*ஆதாரம்:* **முதுமைக்கால உணவுகள்** என்ற அவரின் நூல்; ப. 28)

# புளியின் மருத்துவப் பயன்கள்



ரமா ராமநாதன்
2, மேட்டுத் தெரு, வடிவீஸ்வரம்,
நாகர்கோவில் - 629 002
குமரி மாவட்டம்

மரவாசனைப் பொருட்களில் புளி குறிப்பிடத்தக்கதாகும். புளிய மரத்தின் தாவரவியல் பெயர் ‘டாமரிண்டஸ் இண்டிகஸ்’ (Tamarindus Indicus). சிசால் பினிபெசியே என்னும் தாவரக் குடும்பத்தைச் சேர்ந்தது.

## பயிரிடும் நாடுகள்

புளிய மரத்தின் தாயகம் ஆப்பிரிக்கா. அங்கிருந்து உலகின் பல நாடுகளுக்கும் இதன் சாகுபடி பரவியது. தற்போது, ஆப்பிரிக்கா, இந்தியா, பங்களாதேசம், மியான்மர், மலேசியா, இலங்கை, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் முதலிய நாடுகளில் அதிக பரப்பளவில் சாகுபடியாகிறது. இந்தியாவில் புளி, தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா, மேற்கு வங்காளம், ஒரிசா முதலிய மாநிலங்களில் அதிக அளவில் பயிரிடப்படுகிறது.

## பயன்படும் பாகம்

புளியம்பழத்தின் மேல் தோடு நீக்கி, பின்பு சதைப் பகுதியின் உள்ளிருக்கும் விதைகளைக் களைந்து விட்டு கிடைக்கும் பழச்சதையே நாம் பயன்படுத்தும் புளி ஆகும். அன்றாடச் சமையலில் பயன்படும் புளி, இயற்கை மருந்தாக பல வழிகளில் பயன்படுகிறது.

## அன்றாடச் சமையலில் புளி

அன்றாடச் சமையலில் ரசம், சாம்பார், குழம்பு வகைகள், பல சைட்டிஷ் பதார்த்தங்கள் செய்ய புளி பயன்படுத்தப்படுகிறது. புளி கரைசலுடன் மிளகாய் வற்றல், பெருங்காயம், கடலைப்பருப்பு, கடுகு தாளித்துச் செய்யும் ‘புளிச்சாதம்’ பிரசித்தம். குடும்பத்துடன் வெளியூர் பயணம் மேற்கொள்ளும்போது, புளிச்சாதம் செய்து கொண்டு செல்கிறோம். இச்சாதம் ஒருநாள் முழுவதும் கெடாமல் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பன்மொழிப் பெயர்கள்

புளிக்கு ஆங்கிலத்தில் டாமரிண்ட் (Tamarind) என்று பெயர். சமஸ்கிருத மொழியில் திந்திரினி, இந்தியில் இம்லி, மலையாளத்தில் புளிஞ்சா, தெலுங்கில் சிந்தபண்டு, கன்னடத்தில் ஹூன்சே ஹன்னு, வங்காளத்தில் டென்லே, அசாமியில் டெற்றிலி, ஒரிய மொழியில் டென்துலி, குஜராத்தியில் அம்லி, மராத்தியில் சின்ஞ்சா என்று பெயர்கள் உள்ளன.

## தமிழில் வேறு பெயர்கள்

தமிழில் புளிக்கு சிந்தூரம், சிந்தகம், சஞ்சீவகரணி, விருந்திருனி, ஏகனைம், ஆப்பிலம் என்று வேறு பெயர்கள் உள்ளன.

## பழமொழிகளில் புளி

- பொங்கும் காலம் புளி, மங்கும் காலம் மா.
- தைக்காற்றில் தானாக விழும் புளி.
- புளியைக் கரைத்தானா, புரளியைக் கிளப்பினானா?
- புளியோதரை தின்ன நா ஊறும், பொங்கல் தின்ன பசிமாறும்.

## அடங்கியுள்ள சத்துப் பொருட்கள்

நாம் பயன்படுத்தும் நூறு கிராம் புளியில், சத்துக்கள் கீழ்க்கண்ட அளவில் உள்ளன.



| | | |
|---|---|---|
| புரதம் | - | 3.11 கிராம் |
| கொழுப்பு | - | 0.10 கிராம் |
| நார்ப்பொருள் | - | 5.6 கிராம் |
| மாப்பொருட்கள் | - | 67.4 கிராம் |
| கால்சியம் | - | 17.1 மில்லி கிராம் |
| பாஸ்பரஸ் | - | 110.2 மில்லி கிராம் |
| இரும்பு சத்து | - | 10.9 மில்லி கிராம் |
| ரைபோஃபிளேவின் | - | 0.07 மில்லி கிராம் |
| நியாசின் | - | 0.71 மில்லி கிராம் |
| வைட்டமின் சி | - | 3.00 மில்லி கிராம் |
| கரோட்டின் | - | 60.10 மைக்ரோ கிராம் |
| சக்தி | - | 280 கி. கலோரிகள் |

## மருத்துவப் பயன்கள்

❖ ஒரு நெல்லிக்காய் அளவு புளியை இரண்டு தம்ளர் தண்ணீரில் கரைத்து வடிகட்டி எடுத்து, அத்துடன் சிறிது கருப்பெட்டியைப் பொடித்திட்டு கலந்து பருகினால் மூத்திரை தாரை எரிச்சல், நீர்கடுப்பு குணமாகும்.

❖ புளி கரைசலுடன் பூண்டு அரைத்திட்டு உப்பு சேர்த்து கடுகு, கறிவேப்பிலை தாளித்திட்டு கொதிக்க வைத்து இறக்கவும். இக்குழம்பை சாதத்தில் சேர்த்து சாப்பிட்டால் வாயுத் தொல்லை விலகும்.

❖ சிறிது புளியுடன் சுக்கு உப்பு சேர்த்து மைய்யாக அரைத்து நன்கு சூடாக்கி, இளஞ்சூடு பதத்தில் வீக்கங்களின் மீது பற்றிட்டு வந்தால் வீக்கம் வற்றும்.

❖ சிறிது புளியை கெட்டியாக நீரில் கரைத்து, சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் அரிந்திட்டு உப்பு சேர்த்து சாலட் பச்சடியாக சாதத்துடன் சாப்பிட்டால் அஜீரணம் அகலும். பசி, ருசி உண்டாகும்.

❖ சிறிது புளியுடன் உப்பு வைத்து அரைத்து உள்நாக்கில் தடவி வர, அதன் வளர்ச்சி குறையும்.

❖ புளிக்கரைசலுடன் சுண்டைக்காய் பொடித்திட்டு உப்பு, வெந்தயம் சேர்த்து கொதிக்க வைத்து கடுகு தாளித்து சாதத்தில் சேர்த்து சாப்பிட்டால் பித்தம் குணமாகும்.

❖ ஒரு தம்ளர் இளஞ்சூடான நீருடன் சிறிது புளியிட்டு கரைத்து மிளகுத்தூள் சேர்த்து கலந்து வாய் கொப்பளித்துவர வாய்ப்புண், தொண்டைப் புண் குணமாகும்.

❖ இரண்டு வெற்றிலை, நான்கு மிளகு, சிறிது புளி இவைகளைச் சேர்த்து மென்று தின்று வந்தால் வயிற்றுப் பொருமல் வற்றும்.

❖ ஒரு செவ்வாழைப் பழத்துடன் சிறிய நெல்லிக்காய் அளவு புளியும் சேர்த்து சாப்பிட்டு தண்ணீர் பருகிவர வெள்ளைப்படுதல் நீங்கும்.

❖ கொஞ்சம் புளியுடன் சுண்ணாம்பு சேர்த்து அரைத்து பூரான், தேள் கடிவாயில் பூசினால் விஷம் முறியும். கடுப்பு மாறும்.

❖ சிறிது கரிசலாங்கண்ணிக் கீரை வைத்து அரைத்து புளி ஒரு நெல்லிக்காய் அளவு என்ற வீதம், பத்து நாட்கள் தின்று வர வெளிமூலம் குணமாகும்.

❖ அதிக மது உண்ட போதை தெளிய, சிறிது புளி கரைசலுடன் தனியாத் தூள் சேர்த்து குடித்தால் போதை நன்கு தெளிந்து இயல்புநிலைக்கு வரும்.

❖ புளியம் விதையை நீரிலிட்டு வேகவைத்து எடுத்து மைய்யாக அரைத்து வேனற் கட்டி மீது தடவிவர கட்டி குணமாகும்.



❖ புளியை கரைத்து வடிகட்டி, அத்துடன் போதிய அளவு நீர் சேர்த்து வெல்லம் பொடித்திட்டு ஏலக் காய்த்தூள் கலந்து புளிப்பானம் செய்து பருகினால் கோடை உஷ்ணம் உடம்பைத் தாக்காது. உடல் குளிர்ச்சி அடையும்.

❖ புளிய விதையின் மேல் தோடை தனியாக எடுத்து அத்துடன் மாதுளம்பழத் தோடையும் சேர்த்து பொடியாக்கி சாப்பிட்டால் சீதபேதி குணமாகும்.

❖ சிறிது புளிக்கரைசலுடன் சின்ன வெங்காயம் அரிந் திட்டு சீரகத்தூள் சேர்த்து சாப்பிட்டால் மூலச்சூடு நீங்கும்.

❖ சிறிது புளியுடன் ஊற வைத்த வெந்தயம் வைத்து அரைத்து கண்களைச் சுற்றி பூசிவர கண்சிவப்பு மாறும்.


❖ கொஞ்சம் புளி கரைசலை மாம்பழக் கூழுடன் கலந்து குடித்தால் உடல் சோர்வு நீங்கும். புத்து ணர்ச்சி ஏற்படும்.

❖ சிறிது புளியுடன் ஏலக்காய் வைத்து அரைத்து சாப் பிட்டால் தொடர் வாந்தி நிற்கும்.

❖ சிறிது புளி கரைசலுடன் நெல்லிக்காய் சாறு, தேன் கலந்து குடித்தால் வயிற்றுக் கோளாறுகள் குண மாகும்.

❋


goldin HI-TECH CLEANING PROCESS DEHULLING PROCESS MACHINERY




❇ Screen-air Separators
❇ Clean-O-graders
❇ Destoners
❇ Gravity Separators
❇ Impact Hullers
❇ Hull Separators
❇ Air Classifiers

*Also we manufacture*

❇ Belt Conveyors ❇ Cyclones
❇ Bucket Elevators ❇ Air Locks
❇ Screw Conveyors ❇ Bag Filters
❇ Redler Chain Coveyors ❇ Centrifugal fans etc.

SINGLE SOURCE FOR TURN-KEY PROJECTS
❇
GOLDIN EXPERTISE AT YOUR SERVICE

A leader in Separation Machineries

EX - COLLABORATOR OF FORSBERG INC. U.S.A.

**Attention**
**Spice Processors**
**Seeds Processors**
**Oilseeds Millers**

❖ Cleaning & Grading system for Spices, grains & seeds
❖ Material conveying system & Dust collection plant
❖ Dehulling & hull Separation Systems
❖ Pre-cleaning and silo storage Plants
❖ Cleaning, Decorticating and oil mill plants

GRAINS : ❇ Wheat ❇ Maize ❇ Barley ❇ Paddy ❇ Coffee ❇ Pulses
SPICES : ❇ Black Pepper ❇ Coriander ❇ Celery Seed ❇ Caraway Seed ❇ Fennel ❇ Cumin Seed ❇ Sesame Seed ❇ Fenugreek
OIL SEEDS : ❇ Sunflower ❇ Groundnut ❇ Castor Seed ❇ Soyabean ❇ Rape Seed ❇ Neem Seed

KINDLY CONTACT
**GOLDIN (INDIA) EQUIPMENT PVT. LTD.**
F/29, B.I.D.C. Industrial Estate, Gorwa Vadodara-390 016
**Mob :** 94260 79535, 98250 61427
**Telefax** : 91-0265-2280168, 2290642
**E-mail** : goldinequip@yahoo.com, sales@goldinequip.com
website : www.goldinequip.com

# வாசனைப் பயிர் வளர்ச்சியில் நுண்ணுயிரிகள்

விவசாயத்தில் மிக முக்கியமான காரணி மண். அதுவும் வளமான மண். இந்த வளம் என்பதைப் பிரித்துப் பார்த்தால் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து என்று பயிர் வளர்ச்சிக்கு தேவையான அம்சங்கள் இடம் பெற்றிருக்கும். இந்த மண்ணில் இந்த வளங்களை இயற்கையிலிருந்து கவர்ந்தும், மட்கச் செய்தும் நிலை நிறுத்தி வைப்பவை எவை? சில நுண்ணுயிரிகள்.

மண்ணிற்குள் கோடானு கோடி நுண்ணுயிரிகள் வாழ்கின்றன. இதில் ஒரு சதம் மட்டுமே தீமை செய்யும் நுண்ணுயிரிகள். மீதமுள்ள 99 சதமும் நன்மை செய்யக் கூடியவை. இந்த நன்மை செய்யும் நுண்ணுயிரிகளை என்ன செய்தோம்? அளவிற்கதிகமான இரசாயன உரங்களை மண்ணில் போட்டு மண்ணின் இயற்கைத் தன்மையை அழித்து விட்டோம். பயிர்களுக்கு எந்தச் செலவுமில்லாமல் ஊட்டச்சத்துக்களை வழங்கிக் கொண்டிருந்த நுண்ணுயிரிகளைச் சிதைத்து விட்டோம். இந்த உண்மையை உணர்ந்து கொண்ட விஞ்ஞானிகள் இந்த நுண்ணுயிரிகளை ஆய்வகத்தில் உருவாக்கும் தொழில் நுட்பத்தைக் கண்டறிந்தனர். அவற்றை உருவாக்கி, மண்ணில் சேர்த்து மீண்டும் வளமைக்கு வழி கண்டுள்ளனர்.

இவற்றுள் குறிப்பிடத்தக்க, இப்போது விவசாயிகளிடையே பிரபலமாகியுள்ள ரைசோபியம், அசோஸ்பைரில்லம், அசட்டோபேக்டர், அசிட்டோபேக்டர், நீலப்பச்சைபாசி, அசோலா, டிரைக்கோடெர்மா போன்றவையாகும்.

### டிரைகோடெர்மா

ஏலம், மிளகு விவசாயிகளுக்கு உதவிடும் நுண்ணுயிரி டிரைகோடெர்மாவாகும். இது ஏலத்தில் பெரும் பாதிப்பைத் தரும் அழுகல் நோயைத் தடுக்கக் கூடியதாகும்.

### ஏலத்தோட்டத்தில் டிரைகோடெர்மா

- ❖ ஒரு கிலோ டிரைகோ டெர்மாவை, 50 கிலோ காய வைத்து, பொடியாக்கி நனைக்கப்பட்ட சாணப்பொடியுடன் கலந்து செடிகளுக்கு இடலாம்.
- ❖ ஏப்ரல்-மே மாதங்களில் ஏலச்செடிகளில் நோய் தாக்கிய, முதிர்ந்த, காய்ந்த பகுதிகளைக் கவாத்து செய்ய வேண்டும்.
- ❖ மே-ஜூன் மாதங்களில் மூன்று-நான்கு மழைகள் கிடைத்த பின்பு ஒரு செடிக்கு 2½ கிலோ சாணப்பொடியுடன் கலந்த டிரைகோடெர்மா கலவையை இட வேண்டும். இதை ஆகஸ்ட்-செப்டம்பர் மாதங்களில் மீண்டும் ஒரு முறை இடவேண்டும்.

டிரைகோடெர்மா இட்டபிறகு பூஞ்சாணக் கொல்லிகளைப் பயன்படுத்தினால் டிரைகோடெர்மா நுண்ணுயிரி அழிந்து விடும்.

### மிளகுத் தோட்டத்தில்

மிளகுத் தோட்டத்தின் கொடுமையான நோயான உடன் வாடல் நோயை டிரைகோடெர்மா கலவைமூலம் கட்டுப்படுத்தலாம்.

- ❖ ஏப்ரல்-மே மாதங்களில் நோய் தாக்கப்பட்ட இலைகள் மற்றும் கிளைகளை நீக்க வேண்டும்.
- ❖ மே-ஜூன் மாதங்களில் ஒரு சதம் போர்டோ கலவையைத் தெளிக்க வேண்டும். கொடியின் வேர்ப்பகுதியில் 0.2 சதம் காப்பர் ஆக்சிகுளோரைடு (100 லிட்டர் நீரில் 200 கிராம்) கரைசலை கொடிக்கு மூன்று-ஐந்து லிட்டர் அளவில் ஊற்ற வேண்டும்.
- ❖ மேற்கூறப்பட்ட செய்முறைகளைச் செய்த 15 நாட்களுக்குப் பின்னர் சாணப் பொடியுடன் கலந்த டிரைகோடெர்மா கலவையை ஒரு மிளகுக் கொடிக்கு ஐந்து கிலோ வீதம் இட வேண்டும்.
- ❖ ஆகஸ்ட்-செப்டம்பர் மாதங்களில் மேற்கூறிய அளவை இரண்டாம் முறையும் இட வேண்டும்.

### சூடோமோனஸ்

வனிலா கொடி வளர்ச்சிக்கும், நோய்களைத் தவிர்க்கவும் சூடோமோனஸ் எனும் நுண்ணுயிரி பயன்படுத்தப்படுகிறது. இதனை சூடோமோனஸ் புளோரசன்ஸ் என்றும் கூறுவர். இந்த பாக்டீரியா தாவரங்களின் வளர்ச்சிக்கும், நோய் எதிர்ப்புத் தன்மையைத் தரக்கூடிய ஹார்மோன்களையும், ஆன்டிபயோடிக் குணங்களையும் உருவாக்கி வழங்குகிறது.

சூடோமோனசை பொடியாகவும், திரவமாகவும் பயன்படுத்தலாம். இதில் திரவ வடிவமே சிறந்ததாகும்.

### பயன்படுத்தும் முறை

10 மி.லி. சூடோமோனஸ் திரவத்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து வனிலாக் கொடிகளில் தெளித்தும், வேர்ப்பகுதியில் நனைத்தும் பயன்படுத்தலாம். ஒரு சிறிய கொடிக்கு 100 மி.லியும் பெரிய கொடிகளுக்கு 500 மி.லி முதல் ஒரு லிட்டர் தேவைப்படும். இதனை மே, ஆகஸ்டு, அக்டோபர் மாதங்களில் பயன்படுத்த வேண்டும். இருந்தாலும் இதனை எல்லா மாதங்களிலும் பயன்படுத்தலாம். சூடோமோனசை மற்ற இரசாயன மருந்துகளுடனோ, பூஞ்சாணக் கொல்லிகளுடனோ கலந்து பயன்படுத்தக் கூடாது. இரசாயன மருந்துகளோ, பூஞ்சாணக் கொல்லிகளோ பயன்படுத்தியிருந்தால் இரண்டு வாரம் இடைவெளி விட்ட பின்பே சூடோமோனசை பயன்படுத்த வேண்டும். ✲

# நிகழ்வுகள்

## ஏத்தாப்பூர்





கடந்த மார்ச் 19, 2009ல் ஏத்தாபூரில் நடைபெற்ற தர மேன்மை பயிற்சி வகுப்பில் என்ஜிஓ அதிகாரிகளுக்கு விளக்கம் கூறுவது முனைவர் வி. பழனிச்சாமி, பேராசிரியர் மற்றும் தலைவர், டிசிஆர்எஸ், தமிழக வேளாண் பல்கலைக் கழகம்



சேலம் மாவட்டத்திலுள்ள ஏத்தாபூரில் நடைபெற்ற பயிற்சி முகாமில் பங்கேற்ற என்ஜிஓ அதிகாரிகள்

## அகாலி




அட்டப்பாடி மலைப்பகுதி அபிவிருத்தி சங்கத்தின் திட்ட இயக்குநர் திரு. வி.கே. உனியாள் ஐஎஃப்எஸ், வேளாண் அதிகாரிகளுக்காக பயிற்சி முகாமை மார்ச் 28, 2009ல் துவக்கி வைத்து உரையாற்றும் காட்சி



இயற்கை விவசாயம் தொடர்பான பயிற்சி முகாமில் பங்கேற்ற விரிவாக்க அதிகாரிகள்

# ஏற்காடு



மிளகு தரமேன்மைக் கருத்தரங்கில் பார்வையாளர்கள்




முனைவர் வி. லஷ்மணன் பேராசிரியர் மற்றும் தலைவர் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஏற்காடு மிளகு விவசாயிகளிடையே உரையாற்றும் காட்சி

# அப்பங்காலா




சிறந்த வேளாண் செய்முறைகளைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி திரு. பி. துலீப் நஞ்சப்பா, தலைவர், கூர்க் விவசாயிகள் சங்கம், அவர்கள் மார்ச் 23, 2009ல் கர்நாடகத்திலுள்ள மடிகேடி எனுமிடத்தில் உரையாற்றும் காட்சி



அப்பங்காலா விவசாயிகள் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் ஒரு தோற்றம்

# பிலிகிரி



மார்ச் 12, 2009ல் கர்நாடகத்தில் பிலிகிரி எனுமிடத்தில் ஏலக்காய் தரமேன்மையின் அவசியத்தைப் பற்றி ஏலவிவசாயிகளுக்கு திரு. எம்.ஒய். ஹொன்னூர், முதுநிலை கள அதிகாரி, ஸ்பைசஸ் போர்டு, சோமவார்பேட் எடுத்துக்கூறும் காட்சி



நிகழச்சியில் பங்கேற்ற ஏலவிவசாயிகளில் ஒரு தோற்றம்

# கக்காபே




ஏலவிவசாயத்தில் ஏலக்காய் நாற்றுப் பண்ணைகளை உருவாக்குவதில் உள்ள நுட்பங்களை ஏலவிவசாயிகளுக்கு எடுத்துக்கூறுவது திரு. கே.டி. விவேக், கள அதிகாரி, ஸ்பைசஸ் போர்டு, பாகமண்டலா. இக்கூட்டம் மார்ச் 22, 2009ல் நடைபெற்றது



கக்காபே கூட்டத்தில் கலந்து கொண்ட ஏலவிவசாயிகள்

## சௌடாலு



மார்ச் 13, 2009ல் கர்நாடகத்தில் சோமவார்பேட்டை தாலுகாவிலுள்ள சௌடாலு என்ற கிராமத்தில் நடைபெற்ற விவசாயிகள் கூட்டத்தில் பங்கேற்கும் ஏலக்காய் மற்றும் மிளகு விவசாயிகள்

## பாகமண்டலா



ஏலக்காயில் வைரஸ் நோயைக் கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி திரு. கே.டி. விவேக், கள அதிகாரி, ஸ்பைசஸ் போர்டு, பாகமண்டலா விளக்கிடும் காட்சி. மார்ச் 25, 2009ல் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஏல விவசாயிகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்

## அசாம் லிங்ஜெய்




கிழக்கு சிக்கிம் பகுதியிலுள்ள அசாம் லிங்ஜெய் என்ற இடத்தில் கடந்த மார்ச் 20, 2009ல் நடைபெற்ற பெரிய ஏலக்காயிற்கான விவசாயிகள் கூட்டத்தில் முனைவர் டி.என். தேகா, இளநிலை விஞ்ஞானி பேசிடும் காட்சி



நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பெரிய ஏலக்காய் விவசாயிகள்

# கான் சுன்ங்




கிழக்கு சிக்கிமிலுள்ள கான் சுன்ங் என்ற இடத்தில் மார்ச் 25, 2009ல் பெரிய ஏலக்காய் மற்றும் இஞ்சிக்கான பயிர் பராமரிப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது. அதில் வேப்பங் கொட்டைக் கரைசலைக் கொண்டு இஞ்சியில் விதை நேர்த்தி செய்யும் முறையை விளக்கிக் கூறுபவர் முனைவர் டி.கே. தேகா, இளநிலை விஞ்ஞானி, ஸ்பைசஸ் போர்டு



விதை நேர்த்தி செய்முறையைக் கவனிக்கும் விவசாயிகள்

# கண்காட்சிகள்

## இயற்கை விவசாயப் பொருட்கள் கண்காட்சி



கொச்சியிலுள்ள காக்கநாடு என்ற இடத்தில் நடைபெற்ற இயற்கை விவசாய பொருட்களுக்கான கண்காட்சி கடந்த ஏப்ரல் 18–21, 2009 தேதிகளில் நடைபெற்றது. வாரியத்தின் காட்சிக் கூடத்திற்கு வருகை புரிந்த எர்ணாகுளம் மாவட்ட ஆட்சியாளர் டாக்டர். எம். பீனா இஆப வாரியப் பிரதிநிதி திரு. டி.கே. அனில் குமாரிடம் விளக்கம் கேட்கும் காட்சி



## ஆகார்

### சர்வதேச கண்காட்சி

புதுடெல்லியில் மார்ச் 7–10 தேதிகளில் நடைபெற்ற ஆகார் இண்டர்நேஷனல் ஃபுட் & ஹாஸ்பிடாலிட்டி கண்காட்சி 2009ல் ஸ்பைசஸ் போர்டு கலந்து கொண்டது. பார்வையாளர் ஒருவரின் கேள்விகளுக்கு விளக்கம் கூறுபவர் செல்வி. அனிதா பட்ரா, ஸ்பைசஸ் போர்டு, புதுடெல்லி

## எகிப்தில் இந்திய வாசனைப் பொருட்களுக்கு எதிர்காலம்

ஸ்பைசஸ் போர்டு எகிப்திலுள்ள கெய்ரோவில் மார்ச் 18–27, 2009 தேதிகளில் நடைபெற்ற கெய்ரோ இன்டர்நேஷனல் கண்காட்சியில் கலந்து கொண்டது. இங்கு இந்திய வாசனைப் பொருட்களுக்கான ஏலக்காய், மிளகு, புளி, சீரகம் மற்றும் பட்டை போன்றவற்றிற்கு சிறந்த வர்த்தக ரீதியான எதிர்காலம் இருப்பதாகத் தெரிகிறது. இக்கண்காட்சியில் எகிப்திலிருந்து மட்டுமின்றி சவுதி அரேபியா, ஜோர்டான், சிரியா,

இராக் மற்றும் பாலஸ்தீனம் போன்ற நாடுகளிலிருந்தும் வர்த்தகர்கள் வந்து கலந்து கொண்டனர். மும்பையைச் சேர்ந்த நோவா இம்பெக்ஸ் என்ற ஸ்பைசஸ் ஏற்றுமதி நிறுவனம் இக்கண்காட்சியில் வாரியத்தின் காட்சிக் கூடத்தின் வழியே கலந்து கொண்டது.



**வாரியத்தின் பிரதிநிதிகளான திரு. சித்தராமப்பா, துணை இயக்குநர் (இடது) மற்றும் திரு. சார்லஸ் ஜே கித்து, இயக்குநர் (நிதி) ஆகியோர் வாரியத்தின் காட்சிக் கூடத்தில்**



**வர்த்தகப்பிரதிநிதிகளுடன் உரையாடுவது திரு. சார்லஸ் ஜே கித்து, இயக்குநர், ஸ்பைசஸ் போர்டு (இடது)**

# தெசலோனிகி சர்வ தேச கண்காட்சி

TIF எனப்படும் Thessaloniki International Trade Fair கிரீஸ் நாட்டில் பிரபலமான கண்காட்சியாகும். இதன் 74வது கண்காட்சி செப்டம்பர் 5-13, 2009 தேதிகளில் நடைபெற உள்ளது. கிரீஸ் மற்றும் அதன் அண்டை நாடுகளில் இந்திய வாசனைப் பொருட்களுக்கு நல்ல எதிர்காலம் உள்ளது. இந்திய வர்த்தக அபிவிருத்திக் கழகம் சுமார் 1000 சதுர மீட்டர் பரப்பில் பங்கேற்க உள்ளது. இதில் தெசலோனிகியிலுள்ள ஹோட்டல் மூலமாக ஒரு உணவுக் கண்காட்சியும் நடத்த ஐடிபிஓ திட்டமிட்டுள்ளது. இக்கண்காட்சியில் பங்கேற்க விரும்பும் வாசனைப் பொருட்கள் ஏற்றுமதியாளர்கள் புதுடெல்லியில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : **திரு. கே.சி. ராவ், தொலைபேசி: 011-23371390.**

# கௌகாத்தி அலுவலக இடமாற்றம்

Deputy Director
Spices Board
Namgarh Path P.O.
Assam Sachivalaya
Dispur
Guwahati - 781 006

***தொலைபேசி எண்கள்:***

அபிவிருத்தித் துறை: 0361 - 222 9776

மார்க்கெட்டிங் : 0361 - 222 9778

தொலைநகல் : 0361 - 222 9779

# ஸ்பைசஸ் போர்டு கலந்துகொள்ளவிருக்கும் 18 சர்வதேச கண்காட்சிகள்

ஸ்பைசஸ் போர்டு 2009-10ல் பல சர்வதேச கண் காட்சிகளில் கலந்து கொள்ளத் தீர்மானித்துள்ளது. கீழ்க்கண்ட பட்டியலில் விபரம் தரப்பட்டுள்ளது. இதில் கலந்துகொள்ள விரும்பும் இந்திய வாசனைப் பொருட்கள் ஏற்றுமதியாளர்கள் வாரியத்தின் காட்சிக் கூடத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்கான பங்கேற்புக் கட்டணம் 200 அமெரிக்க டாலராகும். இதனை சம்பந்தப்பட்ட கண்காட்சியில் வாரியத்தின் பிரதிநிதிகளிடம் கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ள லாம். ஸ்பைசஸ் போர்டில் பதிவு செய்துள்ள ஏற்றும தியாளர்கள் இக்கண்காட்சிகளில் பங்கேற்க விரும் பினால் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

திரு. பி.எஸ். ஸ்ரீகண்டன் தம்பி
துணை இயக்குநர் (விளம்பரம்)
ஸ்பைசஸ் போர்டு, கொச்சி.
தொலைபேசி & தொலைநகல் : 0484 - 2333606

| No | Name of Exhibition | Period |
|---|---|---|
| | | **In 2009** |
| 1 | SIAL, China (International exhibition for the Food and Beverage Trade), Shanghai, China | 19-21 May |
| 2 | Iran Food and Hospitality 2009, Tehran | 24-27 May |
| 3 | Alimentaria Mexico, Centro Banamex, Mexico | 2-4 June |
| 4 | IFT Annual Meeting & Food Expo, New Orleans, USA | 6-10 June |
| 5 | Sweet Eurasia, Istanbul, Turkey, | 18-20 June |
| 6 | Agro Industrial Exposition, Bogota, Columbia, | 16-26 July |
| 7 | Africa's Big Seven-2009, Johannesburg, South Africa, | 19-21 July |
| 8 | SIAL Mercosur, Buenos Aires, Argentina, | 26-28 August |
| 9 | Polagra-Food 2009, Poznan, Poland, | 14-17 September |
| 10 | Anuga 2009, Cologne, Germany, | 10-14th October |
| 11 | World Food Ukraine, Kiev, Ukraine, | |
| 12 | Saudi Food 2009, Riyadh, | 1- 4 November |
| 13 | 6th Exhibition of Food Products, Services and Technologies, Chile, | 3-6 November |
| 14 | Ingredients Russia, Russia, Moscow, | 24-27 November |
| | | **In 2010** |
| 15 | Biofach, Germany, | 19-22 February |
| 16 | Gulfood, Dubai, | 23-26 February |
| 17 | Foodex, Tokyo, Japan, | 3-6 March |
| 18 | Cairo International Fair, Cairo, Egypt | 15-25, March |

**Board to organise three Spice food festivals**

| Sl. No. | Particulars | Probable period |
|---|---|---|
| 1 | Indian spice food festival in Venezuela (LAC) | March 2010 |
| 2 | Indian Spice Food Festival in Sweden | June 2010 |
| 3 | Indian Spice Food Festival in Australia | September 2010 |

# பரிந்துரையில்லாமல்.....

மிக மிக நன்றாகப் படிக்கும்
மாணவன்.
எதிலும் நூற்றுக்கு நூறுதான்
ஆனாலும்
மேலிடத்து செல்வாக்கும்
சிபாரிசும் இருந்தால் மட்டுமே
அந்த மாணவனுக்கு
வெற்றி என்ற
அங்கீகாரம் கிடைக்கும் என்றால்
அந்த சூழலை நினைத்துப்
பார்க்க முடிகிறதா?

இதேபோன்றதொரு கதைதான்
ஒரு ஏக்கரில்
65 மூட்டை நெல்
உற்பத்தி செய்த
ஆந்திர மாநிலத்தின் மைந்தன்
நரசிம்ம ராஜுயாதவிற்கு
நடந்துள்ளது.

ஆம்!
பாரம்பரிய விவசாய
முறைகளை மட்டுமே
பின்பற்றி 50 ஆண்டுகாலமாக
மண்ணை மாசுபடுத்தாமல்
ஆண்டுதோறும் ஏக்கருக்கு
15 டன் மாட்டுச்சாண உரம்.

கோடை காலத்தில்
மாட்டுக்கிடை
இதில் கிடைக்கும் சாணம்
கோமியம்
போன்றவைகளே
அடுத்து செய்யப்போகும்
பயிர்களுக்கான உரம்.
இதை மட்டுமே பின்பற்றியதால்
ஒரு ஏக்கருக்கு
65 மூடை நெல் உற்பத்தி
செய்தவருக்கு
பத்மஸ்ரீ விருது
கிடைத்துள்ளது
தமிழகத்திலிருந்து
இரு பெரும் புள்ளிகள்
தலையிட்டதால்.

இந்தியா முழுமைக்குமே
இயற்கை விவசாயம்
செய்பவர்களின் பட்டியல்
ஆட்சியாளர்களின் வலது கை
நடுவிரல் தட்டியதும்
கிடைக்க வேண்டாமா?

அவர்களின்
முயற்சிக்கும்
பொறுமைக்கும்
இயற்கையை மதித்த
அவர்களின் மனநிலைக்கும்
உயர்நிலை விருதுகள்
தரப்பட வேண்டாமா?

சிறந்த நடிகர் நடிகைகளுக்கு
அடுத்த வரிசையிலாவது
சிறந்த இயற்கை விவசாயி
என்ற விருது மட்டும்
சிறந்த ரீதியில்
வழங்கப்படுமானால்
எத்தனையெத்தனை
நாராயணரெட்டிகளும்
நம்மாழ்வார்களும்
சுந்தரராமன்களும்
கோமதிநாயகம்களும்
மது. ராமகிருஷ்ணன்களும்
மண்புழு ரவிகளும்
ஒவ்வொரு ஆண்டும்
தமிழகத்திலிருந்து மட்டுமல்ல
இந்தியா முழுவதிலுமிருந்து
இந்த விருது பெற
தகுதி பெற்றவர்களாவர்
தெரியுமா?

இதற்கெல்லாம்
அடிப்படைத்தேவை
இயற்கையை
மண்ணை
உயிர்களை
பயிர்களை
மதிக்கத் தெரிந்தவர்களே
விவசாயத் துறையை
ஆட்சி செய்ய வேண்டும்.

இல்லையானால்
இயற்கைக்குப் பாதுகாப்பில்லை;
வனங்கள் அழிபடும்;
மண் வளம் கரைந்திடும்;
சுற்றுச்சூழல் மாசுபடும்.

நாமெல்லாம்
ஒன்றை மட்டும்
மனதில் வைக்க வேண்டும்.

ஒவ்வொரு மரம்
வெட்டப்படும் போதும்
வறட்சி வரவேற்கப்படுகிறது;
பட்டினிக்கு
பந்தி வைக்கப்படுகிறது.

மனமுறிவு ஏற்பட்டால்
குடும்பம் தொடராது
மரமுறிவு ஏற்பட்டால்
உலகே தொடராது.
வன்முறை எதிர்பிற்கு
ஆதரவு தருவோரே
முதலில்
மரம் வெட்டும்
கோடலியை தடைசெய்யுங்கள்.
அது
அறுவை சிகிட்சை செய்யும்
கத்தியைப் போல்
செயல்பட வேண்டுமென்று
சட்டமியற்றுங்கள்.

சமீபத்தில் இயற்கை
வேளாண் இதழான
ILESIA வில்
இயற்கை விவசாய முன்னோடி
திரு. நாராயணரெட்டி
மனம் நொந்துபோய்
குறிப்பிட்டுள்ள செய்தி என்ன?

உலகமெங்குமே
எல்லாக் காலத்திலும்
அக்னி நட்சத்திரமே
தொடர்கிறது.

வயல்வெளியாவும்
காங்ரீட் சுவர்களாக
நடைபாதையெங்கும்
வாகனப் புகையாக
வெளியுலகில் மட்டுமல்ல
மனிதனின் அகத்திலும்
சூடு பரவியுள்ள நிலை.

இதற்கு வைத்தியம் என்ன?
வெட்டப்பட்ட மரங்கள்
உயிர்ப்பட வேண்டும்.
அதற்கும் வழி சொல்கிறார்
பெரியவர்.

நம் ஒவ்வொருவரின்
பிறந்த நாளின் போதும்
ஒரு மரம் நடலாமே!

ஒவ்வொரு மனிதனும்
தனது மரணத்துடன்
இந்த உலகமே அழிந்துபோகும்
என்று நினைக்கக் கூடாது.

நம் முன்னோர்கள்
கட்டிக்காத்த இயற்கைதான்
நம்மை உயிருடன்
வைத்துள்ளது
இந்த உயிர் வாழும் மந்திரத்தை
நம்மைத் தொடர்ந்து
வரும் சந்ததிகளும்
அனுபவிக்க வேண்டுமானால்
இயற்கை மேம்பட வேண்டும்.

மரம் வெட்டும்
தொழிலாளர்களும்
மரம் வெட்டுவதற்கு
அரசின் உரிமம் பெற வேண்டும்.

அவர்களின்
கையிலும் இடுப்பிலும் உள்ள
கோடலிக்கு
துப்பாக்கிக்கு
உரிமம் பெறுவது
போன்ற உரிமம் பெற்று
பயன்படுத்தும்
நியதி வரவேண்டும்.

ஏனென்றால்
கவிப்பேரரசு வைரமுத்து
'மரம்' பற்றிய கவிதையில்
"மரந்தான் மரந்தான் – எல்லாம்
மரந்தான் – இதனை
மறந்தான் மறந்தான்
மனிதன் மறந்தான்".

இதற்கு இசை சேர்த்து
திருமதி ஜானகி,
எஸ்.பி. பாலசுப்ரமணியம்
குரலில் பாடியுள்ள
பாடலைக் கேட்டால்
மரம் நம்
உறவினராகும்.

உறவைக் கொல்லலாமா?
எங்கும் எதிலும்
நல்லுறவு இருந்தால் மட்டுமே
அங்கு வளர்ச்சி இருக்கும்.

வளர்ச்சிக்கு நாம் ஏன்
தடையாக வேண்டும்?

ஆனாலும்
பத்மஸ்ரீ பெற்ற யாதவ்
இது ஒரு தொடக்கம் மட்டும்
என்னைப் போல்
எத்தனையோபேர் உள்ளனர்.
அவர்களுக்கும்
ஆண்டுதோறும்
இதுபோன்ற விருதுகள்
வழங்கப்பட வேண்டுமென்ற
தனது கருத்தையும்
விதைத்துள்ளார்.

நிரூபித்து விட்டார்
இயற்கையை நேசிப்பவனின்
மனமும் பரந்துபட்டதென்று!

'பத்மஸ்ரீ' விவசாயப் பட்டங்கள்
இனியும் தொடருமா
பரிந்துரையில்லாமல்?


**– போடி சிவாஜி**

# முக்கிய வாசனைப் பயிர்களுக்கான ஜூன் மாத சாகுபடிக் குறிப்புகள்

*தமிழில்:*
**எம்.எஸ். இராமலிங்கம்,**
முதுநிலை கள அதிகாரி,
கோயம்புத்தூர்

| *பயிர்களின் பெயர்* | *சாகுபடி முறைகள்* |
|---|---|
| **ஏலக்காய்** நாற்றங்கால் பராமரிப்பு | ➢ போதுமான வடிகால் வசதியை ஏற்படுத்துவதால் நாற்றழுகல் நோயைத் தவிர்க்கலாம்.<br>➢ நாற்றுகள் நெருக்கமாக இருந்தால் வளர்ச்சி குன்றிய நாற்றுகளைப் பறித்துவிட வேண்டும்.<br>➢ நோய் தாக்கிய நாற்றுகள் ஏதேனும் காணப்பட்டால் அவற்றைக் களைந்துவிட வேண்டும். |
| **ஏலத்தோட்டப் பராமரிப்பு** | ➢ அதிக நிழல் உள்ள இடங்களில் பருவ மழை காலங்களில் போதிய சூரிய வெளிச்சம் கிடைப்பதற்கு ஏதுவாக தாழ்வான கிளைகளை அகற்றி நிழல் சீரமைப்பை மேற்கொள்ள வேண்டும்.<br>➢ செடிகளை கவாத்து செய்தல் மற்றும் செடியின் இடைவெளிகளில் உள்ள களைகளை அகற்ற வேண்டும்.<br>➢ போதிய நிழல் இல்லா இடங்களில் நிழல் மரக் கன்றுகளை நட வேண்டும்.<br>➢ அதிக தண்ணீர் தேங்கும் மற்றும் குறைவான வடிகால் வசதி உள்ள தோட்டங்களில் போதுமான வடிகால் வசதி அமைக்க வேண்டும்.<br>➢ உகந்த காலநிலையைப் பொறுத்து நடவுப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.<br>➢ ஏல நாற்றுக்களை நடவு செய்தபின் காற்றில் அசையாதவாறு குச்சி நட்டு அதனுடன் நாற்றுக்களுக்கு சேதம் ஏற்படாதவண்ணம் கட்டிவிட வேண்டும். மேலும் நாற்றின் தூர்ப்பகுதியில் போதுமான அளவில் காய்ந்த இலை / தழை மற்றும் களை எடுத்த செடிகளைக் கொண்டு மூடாக்கு (புதை) இட வேண்டும்.<br>➢ சரிவு உள்ள இடங்களில் நான்கு செடிகளுக்கிடையே சரிவுக்கு குறுக்கே 0.8 மீட்டர் நீளம், 0.5 மீ. அகலம் மற்றும் 0.6 மீட்டர் ஆழமான குழிகளை தேவையான இடங்களில் எடுக்க வேண்டும்.<br>➢ கடந்த மாதத்தில் உரமிடாத தோட்டங்களில் முன்பே கூறியது போல உரமிட வேண்டும். நீர்ப்பாசன வசதி உள்ள இடங்களில் முதல் தவணையாக ஒரு எக்டருக்கு 90 கிலோ யூரியா, 207 கிலோ ராக் பாஸ்பேட் மற்றும் 137 கிலோ பொட்டாஷ் என்ற அளவில் இட வேண்டும். (இது ஒரு வருடத்திற்கு ஒரு எக்டருக்கு பரிந்துரைக்கப்பட்ட உர அளவான 125 கிலோ தழைச்சத்து, 125 கிலோ மணிச்சத்து மற்றும் 250 கிலோ சாம்பல் சத்தின் மூன்றில் ஒரு பகுதியாகும்.)<br>➢ மானாவாரிப் பகுதியில் முதல் தவணையாக, ஒரு எக்டருக்கு 81 கிலோ யூரியா, 187 கிலோ முசொரிபாஸ் மற்றும் 125 கிலோ பொட்டாஷ் என்ற அளவில் இட வேண்டும். (இது ஒரு வருடத்திற்கு ஒரு எக்டருக்கு பரிந்துரைக்கப்பட்ட உர அளவான 75 கிலோ தழைச்சத்து, 75 கிலோ மணிச்சத்து மற்றும் 150 கிலோ சாம்பல் சத்தின் இரண்டில் ஒரு பகுதியாகும்.) |

| | |
|---|---|
| | ➢ மண் பரிசோதனையின் பரிந்துரைப்படி உரமிட வேண்டும். மண் பரிசோதனைப் பரிந்துரைகள் இல்லாவிட்டால் மேலே குறிப்பிட்டது போல் உரமிடலாம்.<br>➢ ரசாயன உரமிடும்போது ஒரு செடிக்கு 5 கிலோ தொழு உரம் அல்லது மண்புழு உரம், 1-2 கிலோ வேப்பம் பிண்ணாக்கு என்ற அளவில் கலந்து செடியின் தூர்ப் பகுதியிலிருந்து 30-40 செ.மீ. தள்ளி செடியினைச் சுற்றி 20 செ.மீ. அகலத்தில் வட்ட வடிவில் சிறு குழி எடுத்துவிட வேண்டும்.<br>➢ இளஞ்செடிகளுக்கு, ஒரு வருடத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட உர அளவில் மூன்றில் ஒரு பங்கினை முதலாவது வருடத்திலும் மூன்றில் இரண்டு பங்கினை இரண்டாவது வருடத்திலும் இட வேண்டும். மூன்றாவது வருடம் முதல் பரிந்துரைக்கப்பட்ட முழு அளவினையும் இட வேண்டும். |
| **ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம்** | ➢ பென்தயோட் பூச்சிக்கொல்லியை 100 லிட்டர் தண்ணீரில் 150 மி.லி. என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். (தண்டு துளைப்பானின் அந்துப் பூச்சி வெளி வரும் சமயத்தில் தெளிக்க வேண்டும்.) |
| **நோய் நிர்வாகம் நாற்றங்கால்** | ➢ நாற்றழுகல் நோயைக் கட்டுப்படுத்த 0.2 சத காப்பர் ஆக்ஸி குளோரைடு அல்லது 0.2 சத மேன்கோசெப் கரைசலைத் தூர்ப்பகுதியில் ஊற்றி மண் நனைப்பு செய்ய வேண்டும்.<br>➢ உயிரிக் கட்டுப்பாட்டு முறையை மேற்கொள்ளும்போது டிரைக்கோடெர்மா அல்லது சூடோமோனாஸ் அல்லது பேசில்லஸ் மண்ணில் இடலாம்.<br>➢ இலை அழுகல் நோயைக் கட்டுப்படுத்த 0.3 சத மேன்கோசெப் கரைசலைத் தெளிக்க வேண்டும். |
| **தோட்ட பராமரிப்பு** | ➢ தண்ணீர் தேங்கும் பகுதிகளில் போதுமான வடிகால் வசதி அமைக்க வேண்டும்.<br>➢ அழுகல் மற்றும் கிழங்கு அழுகல் நோய் தாக்குதல் அதிகமுள்ள இடங்களில் பயிர்ச் சுகாதார முறைகளைக் கடைப்பிடிப்பது, பூசணக் கொல்லி மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளைப் பயன்படுத்துவது போன்ற ஒருங்கிணைந்த நோய் நிர்வாக முறைகளைக் கடந்த மாதம் கடைபிடிக்கவில்லையெனில் இம்மாதம் மேற்கொள்ளலாம்.<br>➢ 0.2 சத காப்பர் ஆக்ஸி குளோரைடு கரைசலைத் தூர்ப்பகுதியில் ஊற்றுவதுடன் ஒரு சத போர்டோ கலவைத் தெளிக்க வேண்டும். 15 நாட்கள் கழித்து டிரைக்கோடெர்மாவைத் தனியாகவோ அல்லது சூடோமோனாசுடன் கலந்தோ தூர்ப்பகுதியில் இட வேண்டும். மீண்டும் ஒரு முறை டிரைக்கோடெர்மாவைத் தனியாகவோ அல்லது சூடோமோனாசுடன் கலந்தோ தூர்ப்பகுதியில் இட வேண்டும். 0.4 சத அகோமின் கரைசலை இலையின் மீது தெளிக்க வேண்டும்.<br>➢ உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளைக் கடைபிடிக்கும்போது டிரைக்கோடெர்மாவைத் தனியாகவோ அல்லது சூடோமோனாசுடன் கலந்தோ தூர்ப்பகுதியில் இட வேண்டும்.<br>➢ தோட்டத்தை அடிக்கடி கண்காணித்து கட்டே (நச்சுயிரி) நோய் தாக்குதல் உள்ள செடிகள் காணப்பட்டால் அவற்றை உடனுக்குடன் அகற்றி அழித்துவிட வேண்டும். |

| | |
|---|---|
| **மிளகு** நாற்றங்கால்  | ➢ பருவ மழை தொடங்கியவுடன் போதிய சூரிய வெளிச்சம் கிடைக்க ஏதுவாக நாற்றங்காலின் நிழலைக் குறைக்க வேண்டும்.<br>➢ நோய்த் தாக்குதலைத் தடுக்க ஒரு சத போர்டோ கலவை தெளிக்க வேண்டும்; 0.2 சத காப்பர் ஆக்சி குளோரைடு (ஒரு லிட்டர் தண்ணீரில் 2 கிராம் என்ற அளவில்) அல்லது 0.1 சத பேவிஸ்டின் (ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு கிராம் என்ற அளவில்) கரைசலைத் தூர்ப்பகுதியில் ஊற்ற வேண்டும். |
| தோட்ட பராமரிப்பு | ➢ நிழல் சீரமைப்பு மற்றும் உரமிடுதலை கடந்த மாதம் கடைபிடிக்கவில்லையெனில் இமமாதம் முடித்துவிட வேண்டும். கம்போஸ்ட் அல்லது தொழு உரம் இட்டு உடனே மூடாக்கு செய்ய வேண்டும்.<br>➢ தங்கள் பிரதேசங்களுக்கு ஏற்ற உயர் விளைச்சல் ரகங்களின் வேர்ப்பிடித்த மிளகு தண்டுப் பதியன்களை நடவு செய்ய வேண்டும்.<br>➢ ஒரு குழியில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தண்டுப் பதியன்களை தாங்கு மரங்களிலிருந்து 30 செ.மீ. தள்ளி வடக்கு அல்லது கிழக்கு நோக்கி நடவு செய்ய வேண்டும்; உடனே பதியன்களைச் சுற்றி மூடாக்கு இட வேண்டும். மேலும் நடவுப் பகுதியில் போதுமான வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும்.<br>➢ குறைந்த மற்றும் நடுத்தரமான சரிவு உள்ள மிளகு தோட்டங்களில் தண்ணீர்க் குழிகளை எடுக்க வேண்டும். இதனால் மேல் மண் மற்றும் மண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாக்க முடியும். |
| பூச்சி நிர்வாகம் | ➢ பொல்லு வண்டு தாக்குதலுள்ள இடங்களில் 0.05 சத குயினால்பாஸ் (100 லிட்டர் தண்ணீரில் 200 மி.லி. என்ற அளவில்) இலைப்பகுதி முழுவதும் நனையுமாறு தெளிக்க வேண்டும். |
| நோய் நிர்வாகம் | ➢ ஒரு கிலோ டிரைக்கோடெர்மாவை 50 கிலோ தொழு உரம் என்ற அளவில் கலந்து ஒரு கொடிக்கு 3 முதல் 5 கிலோ வரை இடலாம். டிரைக்கோடெர்மா அணுக்களின் எண்ணிக்கை 1000 கோடி அளவில் உள்ள வணிக தயாரிப்புகளையும் கூறியவாறு பயன்படுத்தலாம். |
| **வனிலா**  | ➢ 50 செ.மீ.க்கு குறையாத நீளமுடைய வெனிலா தண்டுகளை அல்லது பாலித்தீன் பையில் வேர்ப் பிடித்த போதுமான வளர்ச்சி அடைந்த தண்டுப் பதியன்களை தாங்கு மரங்களின் அடிப்பகுதியில் நடவு செய்ய வேண்டும்.<br>➢ புதியதாக நடவு செய்யும் தோட்டங்களில் கிளைரிசிடியா (சீமைக் கொன்றை), எரித்திரினா (கல்யான முருங்கை) போன்ற நிழல் தரும் மரங்களின் குச்சிகளை நடவு செய்ய வேண்டும்.<br>➢ முன்னமே நடவு செய்த தோட்டங்களில் 50 சத நிழல் கிடைப்பதற்கு ஏதுவாக கிளைரிசிடியா (சீமைக் கொன்றை), எரித்திரினா (கல்யாண முருங்கை) போன்ற தாங்கு மரங்களைக் கவாத்து செய்ய வேண்டும்.<br>➢ வனிலாக் கொடிகளை தாங்கு மரங்களின் மீது கட்டி ஏற்றிவிட வேண்டும்.<br>➢ மே மாதத்தில் இயற்கை எரு இடாத தோட்டங்களில் ஒரு கொடிக்கு ஒரு கிலோ மண்புழு உரம் அல்லது 2 கிலோ தொழு உரம் அல்லது கம்போஸ்டு இட்டு அதன் மீது காய்ந்த இலை தழை, களை எடுத்த செடிகள், பயிர்க் கழிவுகள் போன்ற அங்ககப் பொருட்களையம் பயன்படுத்தி மூடாக்கு இட வேண்டும். |

| | |
|---|---|
| **நோய் நிர்வாகம்** | ➢ நோய் தாக்குதல் ஏற்படாமலிருக்க கடந்த மாதம் சூடோமோனாஸ் தெளிக்கவில்லை என்றால் இம்மாதம் 2 சத சூடோமோனாஸ் (தூள் வடிவத்தில்) (2 கிலோ/100 லிட்டர் தண்ணீரில்) இலைகளின் மீது தெளிக்க வேண்டும். மயிலாடும்பாறையிலுள்ள இந்திய ஏலக்காய் ஆராய்ச்சி நிலையத்தில் சூடோமோனாஸ் திரவ வடிவத்தில் கிடைக்கும். திரவ வடிவ சூடோமோனாஸை ஒரு சதம் அதாவது ஒரு லிட்டர் திரவ சூடோமோனாஸை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். |
| **இஞ்சி**  | ➢ கடந்த மாதம் களை எடுக்கவில்லை என்றால் இம்மாதம் களை எடுத்து முடிக்க வேண்டும்.<br>➢ வடிகால் வசதியை உறுதி செய்ய வடிகால்களைத் தூர்வாரி சீரமைக்க வேண்டும்.<br>➢ நட்ட 40 நாட்கள் கழித்து அங்கக எரு இட வேண்டும்.<br>➢ எரு இட்டவுடன் மண் அணைத்து செடியின் தூர்ப்பகுதியை மூட வேண்டும்.<br>➢ பசுந்தழைகளைப் பயன்படுத்தி இரண்டாவது முறையாக மூடாக்கு இட வேண்டும்.<br>➢ தண்டு துளைக்கும் புழுவினைக் கட்டுப்படுத்த 0.05 சத டைமெத்தோயெட் (100 லிட்டர் தண்ணீரில் 167 மி.லி. என்ற அளவில்) தெளிக்க வேண்டும்.<br>➢ கிழங்கு அழுகல் நோய்த் தாக்குதல் தென்பட்டால் ஆரம்பத்திலேயே நோய்த் தாக்கிய செடிகளை அகற்றிவிட வேண்டும்; நோய் பரவாமல் தடுக்க 0.3 சத டைத்தேன் எம் 45 அல்லது 0.3 சத கேப்டாபாலைத் (100 லிட்டர் தண்ணீரில் 300 கிராம் என்ற அளவில்) தூர்ப்பகுதியில் ஊற்ற வேண்டும். |
| **மஞ்சள்**  | ➢ கடந்த மாதம் களை எடுக்கவில்லை என்றால் இம்மாதம் களை எடுத்து முடிக்க வேண்டும்.<br>➢ வடிகால் வசதியை உறுதி செய்ய வடிகால்களைத் தூர்வாரி தண்ணீர் தேங்காத வண்ணம் சீரமைக்க வேண்டும்.<br>➢ இரண்டாவது முறையாக அங்கக எரு இட வேண்டும்.<br>➢ தண்டு துளைக்கும் புழுவினைக் கட்டுப்படுத்த 0.05 சத டைமெத்தோயெட் (100 லிட்டர் தண்ணீரில் 167 மி.லி. என்ற அளவில்) தெளிக்க வேண்டும்.<br>➢ கிழங்கு அழுகல் நோய்த் தாக்குதல் தென்பட்டால் ஆரம்பத்திலேயே நோய் தாக்கிய செடிகளை அகற்றிவிட வேண்டும்; நோய் பரவாமல் தடுக்க 0.3 சத டைத்தேன் எம் 45 அல்லது 0.3 சத கேப்டாபாலைத் (100 லிட்டர் தண்ணீரில் 300 கிராம் என்ற அளவில்) தூர்ப்பகுதியில் ஊற்ற வேண்டும். |
| **மிளகாய்**  | ➢ அறுவடை முடிந்தவுடன் அடுத்த பருவத்தில் சாகுபடி செய்ய உள்ள நிலத்தில் பசுந்தாள்ப் பயிர்களான தட்டாம்பயறு, சணப்பை, பில்லிப்பசாரா போன்ற பயறு வகைப் பயிர்களை விதைக்க வேண்டும். இதனால் மண் வளம் அதிகரிக்கும்.<br>➢ மிளகாய் மற்றும் பருத்தி ஊடுபயிராக உள்ள தோட்டங்களில் பயிர்க்கழிவுகளை மறு சுழற்சி செய்து மண் வளத்தை அதிகரிக்க முடியும். காய்ந்த நோய் தாக்காத மிளகாய் மற்றும் பருத்தி செடிகளை வேருடன் பிடுங்கி சிறு சிறு துண்டுகளாக வெட்டி மண்ணுடன் கலந்துவிட வேண்டும். மேலும் மண்ணின் நீர் பிடிப்பு திறனும் அதிகரிக்கும்.<br>➢ மிளகாய் நாற்றங்கால் அமைப்பதற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். |

# MONTHLY AVERAGE PRICES OF SPICES FOR APRIL 2009

| SPICE | CENTRE | GRADE | PRICERS / KG |
|---|---|---|---|
| Black Pepper | Kochi | Ungarbled | 121.09 |
| | | Garbled | 126.09 |
| Cardamom small | Vandanmettu e-auction | bulk | 580.50 |
| | Bodinayakanur e-auction | bulk | 584.08 |
| | Saklaspur | | 510.21 |
| | Sirsi | | 414.00 |
| | Maharashtra | | 622.04 |
| Cardamom (L) | Siliguri | Badadana | 155.25 |
| | | Chotadana | 137.88 |
| Chillies | Virudhnagar | | 45.10 |
| Ginger(Dry) | Kochi | Best | 112.88 |
| | | Medium | 107.50 |
| Turmeric | Kochi | Nadan | 48.67 |
| | | Selem | 55.75 |
| | | Agmark | 58.50 |
| | Bombay | Rajpuri Finger | 74.83 |
| | Bombay | Duggirala | 54.17 |
| Coriander | | Indori | 47.17 |
| | | Kanpuri | 50.17 |
| Cumin | Bombay | 4% | 109.42 |
| Fennel | Bombay | - | 91.25 |
| Fennugreek | Bombay | - | 29.75 |
| Mustard | Chennai | - | 32.63 |
| Garlic | Bombay | - | 22.17 |
| Celery | Bombay | - | 48.50 |
| Clove | Cochin | - | NA |
| Nutmeg(with shell) | Cochin | - | 130.00 |
| Nutmeg(without shell) | | | 233.64 |
| Mace | Cochin | - | 416.82 |
| Cassia | Chennai | - | 78.13 |
| Vanilla* | | | 690.00 |

SPICES SOURCES

Average FOB export price - March 2009

Prices are collected from secondary sources like Agricultural Produce Market committees, Kirana Merchants Association, India Pepper and Spice Trade Association, Licensed Cardamom Auctioneers etc.

## ALL INDIA CARDAMOM AUCTION SALES AND PRICES FOR APRIL 2009 COMPARED WITH APRIL 2008

| PERIOD | APRIL 2009 | | APRIL 2008 | |
|---|---|---|---|---|
| | Quantity sold (Kg) | Average price (Rs./Kg) | Quantity sold (Kg) | Average price (Rs/Kg) |
| First week | 173098 | 543.81 | 114210 | 506.19 |
| Second week | 135991 | 570.86 | 101439 | 518.02 |
| Third week | 148395 | 590.04 | 141867 | 530.78 |
| Fourth Week | 200082 | 591.90 | 127807 | 546.64 |
| Total | 657566 | 574.46 | 485323 | 526.50 |

Source: Auction reports received from Licensed Cardamom Auctioneers

# AVERAGE INTERNATIONAL SPOT PRICES FOR APRIL 2009

| SPICE | MARKET | GRADE | (USD/KG) | (RS/KG) |
|---|---|---|---|---|
| Black Pepper | U.S.A | MG-1 | 2.54 | 127.15 |
| White Pepper | U.S.A | Muntok | 3.97 | 198.74 |
| Cardamom(Small) | Saudi Arabia | India Asta Extra Bold | 16.11 | 806.47 |
| Chillies | U.S.A | India S4 | 2.32 | 116.14 |
| | | Chinese Small | 1.87 | 93.61 |
| Ginger(Dry) | U.S.A | Chinese Sliced | 2.87 | 143.67 |
| Turmeric | U.S.A | AFT 5..25 Curcumin | 1.87 | 93.61 |
| Coriander | U.S.A | Canadian | 1.48 | 74.09 |
| Cumin | U.S.A | Australian | 1.98 | 99.12 |
| Fennel | | Egyptian fancy | 1.70 | 85.10 |
| Fennugreek | U.S.A | Ind / Turkey | 1.15 | 57.57 |
| Clove | U.S.A | Mad / Zan / Com | 4.85 | 242.79 |

AVERAGE IMPORT PRICE OF VANILLA IN TO USA

| GRADE/ORIGIN | MARKET | FEBRUARY' 09 US $/KG |
|---|---|---|
| Madagascar | USA | 22.36 |
| Indonesia | USA | 18.33 |
| India | USA | 18.63 |
| Uganda | USA | 20.53 |

Exchange Rate 1 US $ = Rs. 50.06

SOURCE: 1.A.A. SAYIA & CO.INC.HOBOKEN




Nani leverages 30years in delivering the finest in Indian Turmeric for domestic and international markets, combining the right mix of traditional expertise and research with dollops of creative thinking to offer complete qualitative Turmeric Whole and Ground at best competitive markets.

Nani's production facilities and headquarters are located in Erode, Tamilnadu, India - the heart of India's largest production area for turmeric crops. From an area that accounts for more than 70% of India's finest turmeric. Nani's merchandising activities reach producers all over the world.

ATC

Aditya ®

Estd. 1972

ATC ® ABHISHEK 5001 ® ADITYA TURMERIC ® Nani ®



**NANI AGRO FOODS (P) LTD.**

32, Ottukkara Chinnaiya Street, Erode - 638 003. TAMILNADU. INDIA.

Phone : Off. (0424) 2214111,2214011, 2217195 Tel : MEGAFIN Email : aditya501@eth.net

Website : www.adityaspices.com www.turmericworld.com

ஸ்பைஸ் இந்தியா தமிழ் மாத இதழ், மே 2009
Tamil May 2009
Price per copy Rs. 5/-

REGISTERED No.
KL/EKM/106/2009-2011
RNI No. 44665/88
Date of publication : 27th of every month



World class lab for analysis of
Spices & Condiments



Shiva Analyticals India Limited, a world-class analytical laboratory that provides extremely cost effective and high quality analytical services for clients around the globe.

Extensive testing facilities for:

- Residual Pesticides
- Aflatoxins & Ochratoxin
- Banned Dyes
- Microbiological Contaminants
- Toxic Metals
- Nutritional Labelling
- Spec Parameters

Our Strengths

- State-of-the-art instruments like LCMS-MS, ICP-MS, ICP-OES, GCMS, GC, HPLC, FTIR
- Fast turnaround time
- Reliable & Reproduceable Analysis
- Cost comparable to Spice Board

YOUR ASPIRATIONS ARE OUR POSSIBILITIES

Spice Board Accredited

SHIVATEC
ANALYTICAL SOLUTIONS WORLDWIDE

ISO 17025 (NABL) & ISO 9001

SHIVA ANALYTICALS (INDIA) LIMITED

Plot No. 24D [P] & 34D,KIADB Industrial Area, Hoskote, Bangalore - 562 114. India.
Tel: +91-80-2797 1322/ 1626/ 1431 or +91 99002 42040 to 43 Fax: +91-80-2797 1321
Email: info@shivatec-india.com **Website: www.shivatec-india.com**

High on Art